# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2001
ஐப்பசி 5
துல்ஹஜ்ஜா பிறை 19
ஞாயிறு (22-10-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 41

விலை சதம் 60


# "அபிவிருத்தியென்ற போர்வையில் இனக்கொலை!"

## ஜே. ஆர். அரசு மீது அமிர் கடும் தாக்கு



### தமிழீழப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த உறுதி!

### —அமெரிக்கப் பத்திரிகைகளுக்கு செவ்வி!

**இலங்கையில் தமிழ்த்தேசிய இனத்துக்கு எதிராக ஜே.ஆர். அரசாங்கம் மேற்கொண்டு வரும் பல்வேறு இனக் கொலை, இனஒடுக்குமுறை நடவடிக்கைகளையும் அமெரிக்காவிலுள்ள பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த செவ்வியொன்றில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் பொதுச்செயலதிபரும் எதிர்க்கட்சித்தலைவருமான திரு. அமிர்தலிங்கம் அவர்கள் விபரித்துள்ளார். தமிழ்தேசிய இனத்தின் மரபுவழித் தாயகத்தை சிங்களக்குடியேற்றத்தின்மூலம் ஆக்கிரமிப்பதற்கு ஜே. ஆர். அரசு முயற்சிகள் மேற்கொண்டு வருவதாகத்தெரிவித்த திரு. அமிர்தலிங்கம், இந்த இனக் கொலை நடவடிக்கைகளுக்கே வெளிநாட்டு உதவிகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாகவும், இதை எதிர்த்துப் போராடுவதற்கு தமிழ் மக்கள் உறுதி பூண்டுள்ளனர் என்றும் அறிவித்துள்ளார்.**

அக்டோபர் முதலாம் திகதி அமெரிக்காவுக்கு வருகை தந்த தலைவர் திரு. அமிர்தலிங்கமும், திருமதி அமிர்தலிங்கமும், அக்டோபர் 13ம் திகதி 'நியூயார்க் ஹோட்டலில்'' வைத்து அமெரிக்கப் பத்திரிகையாளர்களுக்குச் செவ்வியொன்றை அளித்தனர். இச்செவ்வியை 15-10-78 ''சென்னை இந்து'' வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவிலிருந்து பி.டி.ஐ. நிருபர் இந்தச்செவ்வியை அனுப்பியுள்ளார். அதிலே திரு. அமிர்தலிங்கம் கூறியுள்ளதாவது:

''இலங்கையில் தற்பொழுது ஆட்சி நடத்தும் ஜே. ஆர். அரசு திட்டமிட்டு, இன ஒடுக்குமுறை நடவடிக்கைகளைக் கையாண்டு வருகிறது. இதனால், அங்கு வதியும் சிறுபான்மை தேசிய இனத்தினரான தமிழ் மக்கள், பாதுகாப்பற்ற உணர்வோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

''கடந்த சிறிமா அரசாங்க காலத்தில் கூட, இப்படியான பாதுகாப்பற்ற நிலையில் நாம் இலங்கைத் தமிழர்கள் இருந்ததில்லை.

நாட்டை அபிவிருத்தி செய்கின்றோம் என்ற பெயரில், தமிழரின் பாரம்பரியபிரதேசங்களில் தீவின் பெரும்பான்மை சமூகமான சிங்கள மக்கள் குடியமர்த்தப்படுகின்றார்கள். இக்குடியேற்றத் திட்டங்களுக்காக வெளிநாட்டு உதவிகள் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. இவ்விதமான துஷ்பிரயோகம், மகாவலித் திட்டத்தின் கீழ் பெருமளவில் நடக்கிறது.

''அரசாங்கத்தின் இந்த திட்டமிட்ட குடியேற்றம் பற்றி ஈழத்தமிழ் மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர். அரசின் இச்செயலை எதிர்ப்பதற்கு தமிழினம் உறுதி பூண்டுள்ளது. கடந்த பத்து

—8-ம் பக்கம் பார்க்க

# மாவட்ட மந்திரி ஒரு மாயமான்

### —பண்டிதர் கா. பொ. இரத்தினம்

மாவட்ட மந்திரி பதவியினைப்பற்றி மக்களிடையே மயக்கத்தை உண்டாக்கும் கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்றன. உண்மையில் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மாவட்ட மந்திரி பதவி ஒரு மாயமான்தான். தமிழ் மக்களை - அவர்களின் தலைவர்கள் சிலரை மயக்கி இந்த மாவட்ட மந்திரி எனும் மாயமானின் பின்னே ஓடச் செய்து தமிழ் ஈழத்தை அமைப்போம் எனும் கோரிக்கையைச் சிறைப்படுத்திச் சிதைத்து விடுதற்குச் சனாதிபதி ஜயவர்த்தனா செய்த சூழ்ச்சியின் விளைவுதான் இந்த மாவட்ட மந்திரி பதவி.

''எந்த சிங்கள அரசாங்கமும் எந்த சிங்களத் தலைவரும் - தமிழ் மக்களின் உரிமைகளை முற்றுமுழுதாகக்கொடுக்க மாட்டார்கள்; தமிழ் மக்கள் தமிழ் ஈழத்தை மீளத் திருவினால் மட்டுமே இந்த நாட்டில் விடுதலை பெற்ற தன்மானமுள்ள இனமாக வாழலாம்.'' இந்த உண்மையினை மறப்பவர்கள் மக்களாக வாழமுடியாது. இந்த உண்மையின் அடிப்படையிலேயே தமிழர் விடுதலைக் கூட்டணி இப்பொழுது இயங்கி வருகின்றது. மக்களும் சென்ற பொதுத் தேர்தலில் தமிழ் ஈழத்தை மீள நிறுவுவதற்குத்தான் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வாக்களித்தனர். எனவே தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இந்த மாயமான் பின்னே ஓடுதலைப்பற்றிச் சிந்திக்கவும் தேவையில்லை.

மாவட்ட மந்திரி பதவியை ஏற்றால் தமிழ்ப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றத் திட்டத்தை தடுத்து நிறுத்தலாம்; தமிழர் குடியேற்றத்தை ஊக்கலாம் எனச் சிலர் கூறலாம். சென்ற பல ஆண்டுகளாகத் திட்டமிட்டு நடைபெற்றுவரும் சிங்களக் குடியேற்றத்தை சனாதிபதி ஜயவர்த்தனாவால் நியமிக்கப்படும் மாவட்ட மந்திரி எனும் முக்கால் மந்திரிப் பதவியை ஏற்கும் தமிழர் எவரும் தடுத்து நிறுத்த முடியாது! முடியாது! சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியுடன் சேர்ந்து உழைத்த முழுமந்திரி குமாரசூரியராலோ அரசியல் அதிகாரிகள் அருளம்பலத்தாலோ செல்வநாயகத்தாலோ செய்ய முடியவில்லை. ஆளும் கட்சியுடன் சேர்ந்து உழைத்தால் தமிழ் மக்களுக்குப் பல நன்மைகளைச் செய்யலாம் என்று அவர்கள் எண்ணியதெல்லாம் பொய்யாய், கனவாய், பழங்கதையாகப் போய்விட்டனவே!

முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் சேர்ந்து முழுமந்திரிகளாக உழைத்த தமிழர்கள் கண்ணீர் சிந்திக் கொண்டு அந்தக் கட்சியை விட்டு விலகவில்லையா?

''சன்'' எனும் ஆங்கிலப் பத்திரிகையில் அண்மையில் வெளிவந்த செய்திகள் சனாதிபதியின் உள்நோக்கத்தை நன்கு புலப்படுத்துகின்றன. முக்கால் மந்திரி பதவியான மாவட்ட மந்திரி பதவியை ஏற்பதனால் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றக் குழுவுடன் சேர வேண்டுமாம்.

இவ்வாறு சேர வேண்டுமென்றால் முன்னரே சேர்ந்து முழு மந்திரிப்பதவிகளையும் எடுத்திருக்கலாமே! பிழைக்க வழியின்றிச் சரணாகதி அடையும் நிலைக்குத் தமிழ் மக்கள் வந்து விட்டார்கள் என்று அந்தப் பத்திரிகை நினைக்கின்றதா? புதிய அரசியல் அமைப்பு அமைச்சரவை மந்திரிகளை மட்டுமன்றிப் பிற அமைச்சர்களையும் நியமிக்கும் அதிகாரத்தைச் சனாதிபதிக்கு கொடுக்கின்றது. இந்த அதிகாரத்தின்படி அவர் நான்கு திட்ட வேலை அமைச்சர்களை நியமித்திருக்கிறார். 22 மாவட்ட அமைச்சர்களை நியமித்திருக்கிறார்; இவர்கள் யாவரும் முக்கால் மந்

—8-ம் பக்கம் பார்க்க

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தியா? அரசியல் விடுதலையா முதலில் தேவை?
# தொண்டமானின் கூற்றுப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
# சத்தியப்பிரமாணம் செய்தபின்னர் தமிழீழம் கேட்பது பிழையா?

ச. இராமசாமி,
யாழ்ப்பாணம்.

கே: மாவட்டமந்திரிகள் நியமனம் சம்பந்தமாக வெள்ளை அறிக்கையொன்று சில மாதங்களுக்குமுன் தேசிய அரசுப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டதே— அதன் நிலைமை என்ன?

ப: அந்த வெள்ளையறிக்கை அப்படியே கிடப்பில் போடப் பட்டுள்ளது. அந்த வெள்ளையறிக்கை இன்னும் விவாதிக்கப்படவோ, அல்லது சட்டமாக்கப் படவோ இல்லை. அந்த வெள்ளையறிக்கையின்படி காணிப்பங்கீட்டு அதிகாரம் அந்தந்த மாவட்ட அமைச்சர்களிடமே விடப்படும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் மாவட்ட அமைச்சர்கள் ஜனாதிபதியினாலேயே நியமிக்கப்படுவார்கள் என்றும், இவர்கள் அரசாங்கக் கட்சியிலிருந்தே தெரிவு செய்யப்படுவார்கள் என்றும் வெள்ளையறிக்கை வரையறை செய்கிறது. மாவட்ட அமைச்சர்கள் ஒருபோதும் சுயமாக இயங்க முடியாது. ஜனாதிபதிக்கும் அரசாங்கப் பாராளுமன்றக் குழுவுக்கும் கட்டுப்பட்டே இயங்கவேண்டும். பிறரின் தலையீடின்றி சில வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் நின்றாவது சுயமாக இயங்கமுடியாவிடில், அதிலே சுயாட்சித் தன்மைக்கு ஒரு துளியும் இடமில்லை!

கே: மாவட்ட மந்திரி பதவியை ஏற்பதன்மூலம் தமிழ் பிரதேசத்தை கொஞ்சமாவது அபிவிருத்தி செய்ய முடியாதா?

ப: அபிவிருத்தி செய்யலாம் என்று ஒரு வாதத்துக்காக ஏற்றுக்கொள்வோம். அரசாங்கத்தினால் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ள சிங்களக் குடியேற்றத் திட்டத்தின்படி 'தமிழ்ஈழம்' சிங்களமயமாக்கப்பட்டுவிட்டால், அபிவிருத்தியினால் யாருக்குப் பயன் கிடைக்கப்போகிறது? கறையான் புற்றெடுக்கப் பாம்பு குடிகொண்ட கதையாகிவிடும். அரசியல் விடுதலையை இழந்த ஒரு நாடு முதலில் மீட்டுக்கொள்ள வேண்டியது அரசியல் விடுதலையே தவிர பொருளாதார விடுதலை அல்ல; அயர்லாந்து மக்கள் தமது நாட்டு விடுதலைக்காகப் போராடிய போது, அப்போராட்டத்தை ஆதரித்த கார்ல் மார்க்ஸ், அயர்லாந்து மக்களுக்கு முதலாவது தேவை இங்கிலாந்திலிருந்து பூரண அரசியல்விடுதலை; இரண்டாவதாகத்தான் விவசாயப் புரட்சி— அதாவது பொருளாதார விடுதலை என்று எழுதினார். அரசியல் விடுதலையை வென்றெடுக்குமுன் எந்த ஒரு நாடும் அபிவிருத்தித் துறையில் வெற்றிபெற்றதில்லை. தமிழ் ஈழத்துக்கு முதல்தேவை அரசியல் விடுதலையே-அதற்கப்புறம் தான் அபிவிருத்தி!

ப: அபிவிருத்தியென்ற போர்வையில் 2000 சதுரமைல் தமிழ் ஈழ மண்ணில் சிங்கள ஆக்கிரமிப்புத்தான் நடந்திருக்கிறது. மாவட்ட அபிவிருத்தியென்ற போர்வையில் தமிழ் மக்களின் ஆதரவுடன் எஞ்சியுள்ள தமிழ் நிலத்தையும் பறிப்பதற்கு இப்போது திட்டமிடப்படுகிறது, அபிவிருத்தியென்ற மாயவலைக்குள் வீழ்ந்து மாவட்ட மந்திரிகள் என்ற மாயமானின் பின்னே சென்றால் தமிழ் ஈழம் என்ற சீதை சிங்கள ஆக்கிரமிப்பு என்ற அரக்கன் வசமாவாள்,

கே: கூட்டணியினர் சத்தியப்பிரமாணம் செய்தது சரியென்பதா உங்கள் கருத்து?

டணியை கண்டித்து அறிக்கை விடும்படி ஏதாவது ஒரு கட்டத்தில் அரசாங்கத்தினால்—ஜனாதிபதியால்—திரு. தொண்டமான் நிர்ப்பந்திக்கப்படலாம். அத்தகைய நிர்ப்பந்தத்துக்கு பலியாகி, தமிழினத்தை திரு. தொண்டமான் காட்டிக்கொடுக்கமாட்டாரென்றும் எதிர்பார்ப்போம்.

* * *

இ. ராமலிங்கம்;
யாழ்ப்பாணம்,

கே: ஜமேய்க்காவில் தலைவர் அமிர் அவர்கள் தமிழ் ஈழம் பற்றிப் பேசிய பேச்சு

கட்டியெழுப்ப முன் வர வேண்டும்.

* * *

சு. கணேசன்,
நாவலடி பிள்ளையார் வீதி,
சந்திவெளி,
தமிழ் ஈழம்.

கே: தமிழ் இளைஞர்களை சிறைவைப்பதன்மூலம்தமிழ் ஈழகொள்கைக்குஅரசு உதவி செய்கின்றது என்றே நான் கருதுகிறேன்.

ப: நான் அதை ஏற்றுக்கொள்ளுகிறேன். சுடச் சுடரும் பொன்—துன்பம் அதிகரித்தால் தான் விடுதலை!

* * *

க, வின்சன்,
நாவலர் ரோட்,
யாழ்ப்பாணம்,

கே: பதவியும், அதிகாரமும், வந்த பின்னர் சந்தர்ப்ப வாதியாக மாறிய நீதி அமைச்சரைப் பற்றி தமிழ் மக்கள் என்ன நினைப்பார்கள்?

ப: அரசியல் பச்சோந்தி!

கே: சாதிப் பாகுபாடு காட்டும் சில 'பெரிய மனிதர்களைப்'' பற்றி என்ன நினைக்கலாம்?

ப: அவர்கள் சிறிய மனிதர்கள் என்று!

கே: மாவட்ட மந்திரிகள் நியமனம் சட்டவலுவுள்ளதா?

ப: கிடையாது. அரசியல் சட்டத்திலும் இது இடம் பெறவில்லை; இதற்கெனத் தனிச்சட்டமும் நிறைவேற்றப்படவில்லை. இது உண்மையில் Delegation of Powers தான்; தவிர Devolution அல்ல; ஒரு பண்ணையார் தனது பண்ணை நிலங்களை அபிவிருத்தி செய்வதற்கு கூலியாட்களை நியமிப்பது போலவே ஜனாதிபதி தனது சார்பில் நிர்வாகத்தை நடத்துவதற்கு தான் விரும்பியவர்களை மாவட்ட மந்திரியாக நியமிக்கிறார்: அவ்வளவுதான்;




ப: -'பொய்மையும் வாய்மை யிடத்து புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்''

என்பது வள்ளுவர் வாக்கு, ''புரைதீர்ந்த'' நன்மை கிடைக்குமானால் — பொய்மையும், வாய்மையாகும் என்று வள்ளுவரே கூறும் போது, தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு ஒரு மேடையாக பேரவையைப் பயன்படுத்தும் ஒரேயொரு நல்ல நோக்கத்துடன் கூட்டணியினர் சத்தியப் பிரமாணம் என்ற ஒரு சம்பிரதாயத்தை நிறைவேற்றுவதில் தவறு என்ன?

* * *

ராஜா,
மட்டக்களப்பு.

கே: புதிய அரசியல் சட்டத்துக்கு விசுவாசம் தெரிவித்த கூட்டணியினர் தமிழ் ஈழப் பிரிவினையை இனி எப்படிக் கேட்கலாம் என்கிறாரே திரு. தேவநாயகம்!

ப: இதற்கு அமைச்சருக்குப் புரியக்கூடிய ஓர் உதாரணத்தின் மூலம் விளக்கமளிக்கிறேன். ஒருவன் ஒரு பெண்ணை அக்னி சாட்சியாக, கடவுள் சாட்சியாக, சபையோர் சாட்சியாக சட்டம் சாட்சியாக, மனைவியாக ஏற்றுக்கொண்டு ஒருவருக்கொருவர் விசுவாசமாக இருப்போம் என்று சத்தியம் செய்கிறான்: சில காலம் வாழ்ந்தபின்னர், எந்தப் பெண்ணோடு மணமொத்து வாழ்வேன் என்று சத்தியமெடுத்தானோ அதே பெண்ணை விவாகரத்து செய்துவிட்டு வேறோர் பெண்ணை திருமணம் செய்கிறான். இதை நீதிமன்றமும் அனுமதிக்கிறது. தனிப்பட்ட மனிதர்களே, தனிப்பட்டவாழ்வில் இவ்வாறு சத்தியத்தை மீறுவது சட்டத்தாலும், சமுதாயத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறபோது சாதாரண அரசியல் சம்பிரதாயமான சத்தியப்பிரமாணம் கூட்டணியை எப்படிக் கட்டுப்படுத்தும்?

கே: முப்பதுஆண்டுகால சிங்கள ஆட்சியில் தமிழ் ஈழம் அடைந்த அபிவிருத்தியென்ன?

* * *

எஸ். சாந்தினி,
சுன்னாகம்.

கே: இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மலையகத் தமிழ் மக்களின் அங்கீகரிக்கப்பட்ட கட்சி: தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் அங்கீகரிக்கப்பட்ட கட்சி, இந்த அடிப்படையில் ஒருவருக்கொருவர் உதவுவோம்என்று திரு.தொண்டமான்கூறியிருப்பதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: வரவேற்கிறேன்: தமிழ் ஈழம் கோரி தமிழர் விடுதலைக் கூட்டணி போராடும் போது—சிங்களக் குடியேற்ற ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடும் போது சிங்களப்படையால் தமிழ் இளைஞர்கள் இங்கு சுட்டு வீழ்த்தப்படுவார்களானால் — தமிழ்த்தலைவர்கள் சிறைக்குள் தள்ளப்படுவார்களானால் — திரு. தொண்டமான் தனது மந்திரி பதவியை உதறியெறிந்து விட்டு களத்தில் குதிப்பாரென்று எதிர்பார்ப்போம். யாது காரணத்தினாலோ யூ. என். பி. ஆட்சியுடன் இன்று அவர் ஒட்டி உறவாடினாலும் — தமிழ் ஈழப்பிரிவினைக் கொள்கை தவறு என்று இதுவரை கூறாத ஒரே அமைச்சர் திரு. தொண்டமான்; தமிழ்ஈழப் பிரிவினைக் கொள்கையை [illegible]

வெளிநாட்டுத்தலைவர்களைக் கவரவில்லையென்று லலித் அத்துலத் முதலி கூறியிருந்தாரே!

ப: லலித் அத்துலத் முதலி அப்படிக்கூறியிருப்பதால், அமிர்தலிங்கத்தினுடைய கருத்தாழமிக்க உரை வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ளது என்பது தான் அர்த்தம்.

* * *

எம். சி. அப்துல் காதர்,
மருதமுனை-1,
கல்முனை.

கே: கடந்த பொதுத் தேர்தலின் போது தோன்றிய முஸ்லிம் ஐக்கிய முன்னணி தற்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறது?

ப: தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் ஓர்இணைந்த இயக்கமாக விளங்கும் முஸ்லிம் ஐக்கிய முன்னணி முஸ்லிம் மக்களிடையே அரசியல் விடுதலை உணர்வுகளை

## அமிர் அவ்வாறு கூறினாரா?

தமிழ் பேசும் மக்களில் பெரும்பாலானோர் தமிழ் ஈழக்கோரிக்கைக்கு ஆதரவு வழங்கவில்லையென்று அமெரிக்க 'நியூஸ் வீக்' சஞ்சிகைக்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அளித்த பேட்டியொன்றில் ஒப்புக்கொண்டிருப்பதாக வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி பத்திரிகையாளர்களுக்கு தெரிவித்ததாக 13-10-78 ஈழநாடு ஒரு முன்பக்கச் செய்தியை வெளியிட்டுள்ளது.

திரு. லலித் அத்துலத் முதலி பத்திரிகையாளருக்கு அளித்த மேற்படி பேட்டி அதேநாளில் வெளிவந்த ஏனைய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டிருந்த போதிலும், அவற்றில், திரு. அமிர்தலிங்கம் இவ்வாறு கூறியதாகக் காணப்படவில்லை.

'நியூஸ்வீக்' சஞ்சிகை கிடைத்ததும் சுதந்திரனில் திரு. அமிர்தலிங்கத்தின் பேட்டி அப்படியே எழுத்துக் கெழுத்து தமிழில் வெளியிடப்படும்.

## தமிழ் அழகுத் தம்பியர்

— சரவணையூர் வே. இராசலிங்கம் —

அணி மலர்ச் சோலையும் அடர் மர அடவியும்
பாடிப் பறந்து கூடிக் களித்து
செய்வாய் முகிழ்த்து கொவ்வை புசித்து
நாளும் பொழுதும களிமிக அடையும்
பச்சைக் கிளியைப் பாரடா தோழா!
காலையும் பரிதியும் மாலை மதியும்
சோலைக் கிளிக்கு சொர்க்கமே சொர்க்கம்!
எனினும் தோழா என்னுரை கேளடா!
தச்சன் கூடே சதமாய் இருப்பினும்
பச்சைக் கிளியும் இச்சையுடனிருந்து
அம்மா... ...அப்பா...... அக்கா...... இன்னும்
அன்பே... அமுதே... தேற்றே என்று
வண்ணக் கிளியும் வானத் தமிழில்
புரிதமிழ் அழகே அழகு!
ஆமாம்... தோழா......;
சிங்களச் சிறையின் சுவர்களுக் குள்ளே
தங்கள் இன்னுயிர் தமிழுக்காய் கொடுக்கும்
எங்கள் இளைஞருக் கெவரடா ஈடு!
எங்கள் கோபுரத் தம்பிகள் அன்றோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாராது வந்த மாமணியைத் தோற்போமோ?

அன்பு நண்பா!

தண்ணீர் விட்டோ வளர்த்தோம்
சர்வேசா இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம்
கருகத் திருவுளமோ?

எண்ணமெலாம் நெய்யாக
எம்முயிரினுள் வளர்ந்த
வண்ண விளக்கிது
மடியத் திருவுளமோ?

ஓராயிர வருடம்
ஓய்ந்து கிடந்த பின்னர்
வாராது போல வந்த
மாமணியைத் தோற்போமோ;

என்று அன்றொருநாள் இந்திய சுதந்திரப் பயிர் வாடிடுமோ — தேச விடுதலை இயக்க மதில் மாசு படிந்திடுமோ என்று புரட்சிப் புலவன் பாரதி தனது கவிதை வரிகளைக்கொண்டு கண்ணீர் உகுத்தது போல — இன்றைய தினம் தமிழீழத் திருநாட்டின் விடுதலையொன்றையே தமது குறிக்கோளாகக் கொண்டு—அரிமாக்களென ஆட்சியாளருடன் பொருந்தியபடி — தியாக தீபங்களாக வாழ்ந்துகொண்டிருக்கும் இலட்சிய ஏறுகளின் இதயங்களிலே ஒரு தளர்ச்சி—குமுறல்—ஒரு ஏக்கம் — ஒரு கொந்தளிப்பு—ஏற்பட்டுள்ளதென்பதை யாரும் மறுக்க முடியாது.

அன்னிய சிங்கள ஏகாதிபத்தியம் விட்டெறியத் தயாராக கையில் வைத்துக்காத்துக் கொண்டிருக்கும் அர்த்தமற்ற அதிகாரமற்ற அற்ப சலுகையான மாவட்ட மந்திரி பதவி எனும் மாயமானின் பின்னே கூட்டணி சென்றிடுமோ—இதனால் விடுதலை இயக்கமே திசை மாறிடுமோ—வேகம் குன்றிடுமோ — ஏமாற்றப்பட்டு வந்த பழைய கதையே மேலும் தொடர்ந்திடுமோ—என்கிற கலக்கம் இயக்கத்திலுள்ள விடுதலை விரும்பிகள் மத்தியில் மட்டுமல்ல — பொதுவாகத் தமிழ் மக்களிடையே கூட இன்று ஏற்பட்டுள்ளதென்பதை எவரும் மறைத்திட முடியாது.

கண்ணீரும் செந்நீரும் சிந்தி—காராக்கிருகங்களில் வாடிவதங்கி — உயிர்ப்பலிகள் பல தந்து—உருவாக்கிய இந்த விடுதலை இயக்கம்—திசைமாறிச் சீர்குலைந்து போய் விடுமோ? சிங்கள ஏகாதிபத்தியத்தின் சதிக்குப் பலியாகி விடுமோ? என்கிற ஒரு உள்ளக் குறுகுறுப்பு தமிழ் இளைஞர்களை வாட்டி வதைக்கிறது!

தமிழீழமொன்றே கூட்டணியின் முடிந்த முடிபாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்பு—அக்கொள்கைக்கு 1977 பொதுத்தேர்தலில் தெளிவான ஆணையைப்பெற்ற பின்பு—அந்த இலட்சியப் பாதையிலே செல்லுகின்றபோது — நம்மைத் தாமதித்து வைத்திட, நம்மைப்பொறிக்கிடங்கில் வீழ்த்திட, நம்மைப் பாதையிலிருந்து திசைதிருப்பிட—நமது கண்களில் மண்ணைத் தூவிட அன்னிய சிங்கள ஆட்சி கையாளும் ஒரு சாணக்கிய தந்திரமே இந்தமாவட்ட அமைச்சர் பதவியாகும்.

உண்மையிலே தமிழ் ஈழத்தின் விடுதலையொன்றையே இதய சுத்தியாக நேசிப்போருக்கு — விடுதலைப் போராட்டத்தினைத் தளர்ச்சியின்றி நடத்திச் செல்வதில் நாட்டங்கொண்டோருக்கு — இடையே குறுக்கிடும் மாவட்ட மந்திரிப் பதவி ஒரு பிரச்சினையே அல்ல; மாவட்ட மந்திரி பற்றி இத்துணை தூரம் ஆராயவோ, அக்கறை காட்டவோ, அலசிப் பார்க்கவோ வேண்டிய அவசியமே யில்லை!

பாரதக்கதையிலே வில்வித்தைப் பயிற்சியிலே ஈடுபட்டிருந்த அர்ச்சுனனுக்கு, மரமும், மரத்தின் கிளைகளும், அதிலேயுள்ள இலைகுழை பூக்களும், காயும் கனியும் கண்ணுக்குத் தெரியாது. மரக்கிளையிலே இருந்த குருவியின் கழுத்து மட்டுமே தெரிந்தது போல—தமிழீழ விடுதலையிலே நாட்டம் கொண்டுள்ள உண்மையான விடுதலை வீரர்களுக்கு தமிழீழ இலட்சியம் ஒன்றே குறியாகத் தெரிய வேண்டுமே தவிர — இலைகுழை தழையும், காயும் கனியும் போன்ற சலுகைகள் அல்ல!

சிங்கள சிறீலங்காவைப் போலவே தமிழீழமும், சுதந்திரமான இறைமை கொண்ட ஒரு தனி நாடு என்பதே எமது கூட்டணியின் கொள்கை, கோட்பாடு; ஆனால் ஜே. ஆர். தர விரும்பும் மாவட்ட மந்திரி பதவியோ—சிங்கள சிறீலங்காவின் உறுப்புக்களே நமது (தமிழீழ) மாவட்டங்கள் என்பதை ஊர்ஜிதம் செய்கிறது; இலங்கை ஒரே நாடு என்ற பழைய செயற்கைத் தத்துவத்துக்கும் புத்துயிர் ஊட்டுகிறது; மாவட்ட மந்திரி பதவியை ஏற்றுக்கொள்வது, 24 மாவட்டங்களைக் கொண்ட ஒரே நாடு; இலங்கை என்ற சிங்கள ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் தத்துவத்தினையும் அடிபணிந்து ஏற்றுக்கொள்வதாக அமைந்து விடும்!

1972ம் ஆண்டு மே 22ம் திகதி பிரிட்டிஷ் மகாராணிக்கும் இலங்கைக்குமிடையே அதுவரை இருந்து வந்த அரசியல் தொடர்பு துண்டிக்கப்பட்டபோது — மகாராணியிலே தங்கியிருந்த இலங்கை மக்களின் இறைமை மீண்டும் இலங்கை மக்களின் கைகளுக்கே வந்து சேர்ந்தது—இதன்படி சிங்கள நாட்டினம் தனது இறைமையை மீளப்பெற்றது; தமிழ் ஈழ நாட்டினமும் தனது இறைமையை மீளப்பெற்றது. அதாவது 1916ம் ஆண்டு போர்த்துக்கீயரிடம் யுத்தமுனையில் தமிழன் இழந்த இறைமை 1972ம் ஆண்டு மே 22ம் திகதி தமிழனிடமே மீண்டும் வந்துசேர்ந்தது.

தமிழ் ஈழநாட்டினம், தனது கையில் கிடைத்த இந்த இறைமையைப் பிரயோகித்து தனது நாட்டைத்தானே ஆள முடியாது, சிங்கள நாடு பலாத்காரமாகவும், சட்டவிரோதமாகவும் தனது ஆயுதப்படைகளைக் குவித்து தமிழ் ஈழத்தை இன்று அடக்கியாளுகிறதே தவிர—தமிழ் நாட்டினம் 1972ம் ஆண்டு மீளப்பட்ட தனதுஇறைமையை சிங்கள நாட்டினத்திடம் சம்மதத்தின் பேரிலோ, சட்டரீதியாகவோ, அல்லது யுத்த முனையில் போராடி சரணாகதியடைந்தோ — இது வரை ஒப்படைத்ததில்லை! தமிழ் நாட்டினத்தை ஆளுவதற்கு சிங்கள நாட்டினத்துக்கு எதுவித அருகதையும் அதிகாரமும் கிடையாது!

1972ம் ஆண்டு சிங்கள நாட்டினத்துடன் சேர்ந்து தனதுஇறைமையையும் பயன்படுத்தி அப்போதைய அரசியல் யாப்பை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு நல்க மறுத்து, தமிழ்நாட்டினம்அரசியல் நிர்ணயசபையிலிருந்து விலகிக்

## அரசியல் மடல்

கொண்டு, தனது புனிதமான இறைமையைத் தாரை வார்க்காது பாதுகாத்துக்கொண்டது. அதன் பின்னர் அதே அரசியலமைப்புக்குத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்ட வேளையிலும், சிங்கள ஐக்கிய தேசியக் கட்சி அரசு புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்கு தெரிவுக்குழு நியமித்த போதினிலும் — அவற்றில் பங்கேற்க தமிழர் விடுதலைக் கூட்டணி திட்டவட்டமாக மறுத்ததன் மூலம் தமிழ் நாட்டினத்தின் இறைமை சோரம் போகாது பாதுகாக்கப்பட்டுள்ளது.

எனவே, 1972ம் ஆண்டுக்கு முற்பட்ட நிலைக்கும் 1972ம் ஆண்டுக்கு பிற்பட்ட நிலைக்கும் இந்தஅடிப்படை வேறுபாடுண்டு; 1972ம் ஆண்டுக்கு முன்பு—சிங்கள இனத்தின் இறைமையையும், தமிழ் இனத்தின் இறைமையும் அன்னிய ஆட்சியிடம் இருந்து வந்த காலத்தில்—சில சந்தர்ப்பங்களில் சிங்கள அரசாங்கங்களுடன் ஒத்துழைத்தோம் — அமைச்சர் பதவிகளையும் ஏற்றோம்; அதுவேறு நிலை. அதனால் அப்போது எமது இறைமைக்கு களங்கம் ஏற்படவில்லை; எம்மை நாமே ஆளும் உரிமை தாரை வார்க்கப்படவில்லை.

ஆனால் 1972ம் ஆண்டுக்குப்பிற்பட்ட நிலை வேறு; இன்று எமது இறைமையை சிங்கள நாட்டினத்திடம் தாரை வார்த்துக் கொடுக்க மறுத்து சுதந்திரத்துக்காகப் போராடிவருகிறோம். சிங்கள நாட்டினம் எம்மை எமது சம்மதத்தின் பேரில் இன்று ஆளவில்லை— நாம் எமது சம்மதத்தை அளித்ததுமில்லை. 1972ம் ஆண்டு பாராளுமன்றத்துக்குவெளியே ஓர் புறம்பான சபையாக அரசியல் நிர்ணய சபை கூடி புதிய அரசியலமைப்பை எழுதியதால், எம்மை ஆளக்கூடிய சட்டரீதியான தொடர்பான வலுவையும் சிங்கள நாட்டினம் பெற்றுக்கொள்ளவில்லை; எம்மை யுத்தமுனையிலும் சிங்களவர் வெற்றி கொண்டதில்லையென்பதே எமது ஆணித்தரமான வாதமாகும்—இதுவே அமரர் திருச்செல்வம் நீதிபதிகளின் குழாம் முன்னர் வைத்த உலகைக் கவர்ந்த வழக்குமாகும்.

இந்தநிலையில்—மாவட்டமந்திரிபதவியோ அல்லது வேறு எந்தப்பதவியோ ஏற்று சிங்கள ஆட்சியுடன் தமிழ் நாட்டினம் பங்காளராக ஒத்துழைக்குமானால்— சிங்களவர்கள் நம்மை ஆளுவதற்கு நமது சம்மதத்தை அளிக்கிறோம் என்பதுதான் அர்த்தமாகும்; அதாவது நமது மாசுமறுவற்ற புனிதமான இறைமையை சிங்களவர்களுக்கு நாமாகவே தாரை வார்க்கிறோம்— களங்கப்படுத்துகிறோம்; என்பதே அர்த்தமாகும். நமது சுதந்திரப் பாதைக்கு நாமே குழிதோண்டுகிறோம் என்பதே அர்த்தமாகும்.

**ஆம்—வாராமல் வந்த மாமணியாம் நமது இறைமையை—நமது சுதந்திரக்கோர்க்கையின் வலுவான இந்த சட்ட அடிப்படையை—சிங்கள நாட்டினத்துக்கு ஒத்துழைப்புக்கரத்தை நீட்டுவதன் மூலம் தாரைவார்த்துவிடுவதா என்றே தமிழ் இளைய சமுதாயம் குமுறுகிறது; கொந்தளிக்கிறது.**

ஆயினும்—தமிழினத்தலைவன் — தமிழர் விடுதலைக்கூட்டணியின் வழிகாட்டி—தலைவர் அமிர் அவர்கள் இந்த நிலைமைகளையெல்லாம் சிந்தித்துத்தான்—லண்டன் பி. பி. சிக்கு அளித்த செவ்வியின்போது, மிகவும் இரத்தினச் சுருக்கமாக ஒன்றே ஒன்றைக் கூறியிருந்தார்—

**"தமிழர் விடுதலைக்கூட்டணி சிறீலங்கா அரசுக்கு எவ்வகையிலும் ஒத்துழைப்பு வழங்காது; தனிநாடு இலட்சியத்துக்காகவே எமது இயக்கம் தொடர்ந்து போராடும்."**

என்று அண்ணன் அமிர் அவர்கள் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார் அண்ணன் அமிர்தலிங்கத்தின் உள்ளத்து உணர்ச்சிகளை—சிந்தனை யோட்டத்தை தெரிந்துகொண்டிருப்பவர்கள் அவர் இலட்சியத்திலிருந்து கிஞ்சிற்றும் வழுவாது—இந்த விடுதலை இயக்கத்தைக் கொண்டுநடத்துவார்—வழிகாட்டுவார் என்பதிலே உறுதியுடன் இருந்துவருகின்றனர்.

இன்றையதினம் நமது விடுதலையை யொட்டி நாம் சிந்திக்கவும், விவாதிக்கவும் செயற்படவும் வேண்டிய பிரச்சினைகள் பல மலைபோலக்கிடக்க, நமது கவனத்தை பயனற்ற வேறு பிரச்சினைகளிலே செலுத்தி வீணேமனங்குழம்பிக்கிடக்கிறோம். இத்தகைய குழப்பங்கள் விடுதலை இலட்சியத்தை நெஞ்சிலே ஆழப்பதித்துள்ளவனுக்கு ஏற்படவே கூடாது!

இன்று தமிழீழக்காளைகள் பலரை சிங்களப் பொலிசார் கைதுசெய்து பொய் வழக்கு போடுவதிலேயீடுபட்டிருக்கின்றனர்; மூதூரின் தங்கம் கடந்த பல மாதங்களாக விளக்கமறியலில்; அவரது கைகளிலே விலங்கு; காசியும் மாவையும், மற்றும் மட்டுநகரின் நவமணிகளும் விளக்கமறியலில்; வழக்கை எதிர்பார்த்திருக்கிறார் கல்குடா வீரர் சம்பந்தமூர்த்தி; அகதிமுகாம்களைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் தயாபரசிங்கமும், உதயகுமாரும் கைதாகியுள்ளனர்; இன்னும் ஏராளமான இளைஞர்கள்—தமிழ் ஈழ விடுதலைப்போராட்டவீரர்கள்—தம்மையே இந்த மண்ணின் மீட்சிக்காக ஒப்படைத்துவிட்ட தியாக ஒளித் தீபங்கள்—சிங்களப் பொலிசாரின் கழுகுக்கண்களுக்கு அகப்படாது எங்கெங்கோ 'பதுங்கி' வாழ்கிறார்கள்! காடுமேடாக அலைகிறார்கள்—தமிழ் ஈழம், தமிழ் ஈழம் என்ற மந்திரத்தை உச்சரித்தபடி!

ஆம், ''தமிழ்ஈழம்'' என்ற மந்திரம்தான் எங்கள் அயர்வுக்குச் சுடர் தந்ததேன்! எமது அயர்ச்சியையும், தளர்ச்சியையும் அகற்றி, 'தமிழ் ஈழம்' ஒன்றே நமது ஒரே குறிக்கோள் என்று முழங்கியபடி—பாதைதவறாது பயணத்தைத் தொடருவோம்; ஜே. ஆரின் மாயச் சூழ்ச்சிகளை முறித்தெறிவோம்!

உன் அன்புத்தோழன்

கோவை-மகேசன்

---

## இலவசம்

குடியேற்றப் பகுதிகளில் பனம் விதை நாட்டி மரம் உண்டாக்க விரும்பும் அன்பர்கள், பாடசாலைகள், மன்றங்கள் அவர்களுக்கு வேண்டிய பனம்விதைகளைப்பெற்றுக்கொள்ள யாழ்ப்பாணம் மில்க்வைற் தாபனத்தாரோடு தொடர்புகொள்ளும்படி கேட்கப்படுகின்றார்கள். ஐப்பசி 30ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம்

# வருமானத்தில் ஒரு வீதம் வளமார் தமிழீழத்துக்கு!

தமிழ் மண் காப்போம்—தாயகம் மீட்போம் என்கிற இலட்சிய முழக்கம் ஆவரங்காலில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் இரண்டாவது தேசிய மாநாட்டில் முன்வைக்கப்பட்டது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் சூறையாடப்பட்டு வரும் தமிழ் ஈழத்தின் எல்லைப்புறப் பிரதேசங்களை — குறிப்பாக திருக்கோணமலை, வவுனியா, முல்லைத்தீவு போன்ற பகுதிகளை—எப்படியும் காப்பாற்றியே தீருவோம் என்று மாநாடு உறுதியுடன் முடிவெடுத்தது.

இப்பிரதேசங்களில் காணியற்ற தமிழ் அகதிகளைக் குடியமர்த்துவதென்றும், குடியேற்றப்படும் இந்த தமிழ் அகதிகளுக்கு உறுதுணையாக அங்கேயே அவர்களுடனே இருந்து சேவை செய்வதற்கு ''தமிழ் அகதிகள் தொண்டர் அணி'' என ஓர் தொண்டர் அமைப்பை நிறுவி—அதில் உடற்பலமும் உள்ள உறுதியும் தியாக நெஞ்சமும் கொண்ட எதற்கும் தயாராகவுள்ள தமிழ் இளைஞர்களையும், யுவதிகளையும் உறுப்பினராகச் சேர்ப்பது என்றும் ஆவரங்கால் மாநாட்டில் முடிவு எடுக்கப்பட்டு, இந்த அணியிற் சேருமாறு விடுதலை விரும்பிகளான தமிழ் இளைஞர்களுக்கும் தமிழ் யுவதிகளுக்கும் அறைகூவல் விடுக்கப்பட்டது.

தேவையானுல் தமிழ் மண்ணைக்காப்பதற்கு ஒரு போராட்டத்தை நடத்தவும் தமிழர் விடுதலைக் கூட்டணி தயாராக இருப்பதாகவும் ஆவரங்கால் மாநாட்டில் கூட்டணித் தலைவர்கள் பொறுப்புணர்ச்சியுடன் அறிவித்தனர்.

அகதிகளைக் குடியேற்றவும், அவர்களுக்கு வாழ்வளிக்கவும் தமிழ் மண்ணைக் காத்திடவும் மூலாதார முதல்தேவை நிதியல்லவா? இந்த நிதியை உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமுள்ள தமிழ் ஈழமக்களிடமிருந்து ''வருமானத்தின் ஒரு வீதம் வளமார் தமிழ்ஈழத்துக்கு'' என்ற அடிப்படையில் திரட்டுவது என்று மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

''வருமானத்தில் ஒரு வீதம் வளமார் தமிழீழத்துக்கு'' என்ற தீர்மானம் இப்போது செயல்வடிவம் பெற்றுள்ளதையறிய மகிழ்ச்சியடைகிறேம்.

வெளிநாடுகளில் தற்போது சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் இந்த நிதிக்கு அந்தந்த நாடுகளிலுள்ள தமிழ் ஈழத்தவர்களின் உதவியையும் ஆதரவையும் திரட்டி வருகிறுர்; அதே சமயம், உள்நாட்டிலும் இந்த நிதியைத் திரட்டுவதற்கு கூட்டணி ஏறபாடு செய்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உத்தியோக முத்திரை பொறிக்கப்பட்ட அட்டையுடன், மாதாமாதம் கூட்டணியின் மூலக்கிளை உறுப்பினர்கள் வீடு வீடாகச் சென்று நிதி திரட்ட ஆரபபித்துள்ளனர். சிறுதுளி பெருவெள்ளமென்பதை உணர்ந்து இந்தநிதிக்கு தொய்யாது துவளாது, தொடர்பாக தங்கள் பங்கை வழங்க வேண்டியது ஒவ்வொரு தமிழ்ஈழத்தவனின் புனிதமான கடமையாகும். நம் தாய்த்திருநாட்டுக்காக — நமது மண்ணுக்காகத்தான்—இந்த நிதியை அளிக்கிறேம் என்பதை ஒவ்வொரு தமிழனும் உணர்ந்து வழங்க வேண்டும்.

திருகோணமலை, வவுனியா போன்ற தமிழர் பிரதேசங்கள் அனைத்துத் தமிழரினதும் செல்வங்கள்; நமக்கேயுரிய இந்த மண்ணை அடாத்தாகவும், சட்டவிரோதமாகவும் அபகரிப்பதற்கு சிங்கள பௌத்த வெறியுணர்வு கொண்ட சிங்கள முதலாளிகள் தனிப்பட்ட முறையில் எவ்வளவோ பணத்தை அள்ளிச்சொரிகின்றனர்; நமது தமிழ் செல்வந்தர்களோ, தமிழ்தேசிய உணர்வு சிறிதுமின்றி, உண்பதும், உறங்குவதும் உல்லாச சல்லாப வாழ்வு வாழ்வதுமாக, அக்கறையின்றி கண் மூடித்துயில்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் கண் விழித்தெழுந்து தமிழ் மண்ணைக்காத்திட தாராளமாக நிதியை வாரிவழங்கிட வேண்டும்; தமது முதலீடுகளைக் கொண்டு திருகோணமலை, வவுனியா போன்ற பிரதேசங்களில் தொழில்களை நிறுவவேண்டும்.

சிங்களக் குடியேற்றங்களை எதிர்த்து தமது மண்ணைக்காத்திடப் போராடி வரும் திருகோணமலை, வவுனியா போன்ற தமிழ்ஈழ எல்லையோரங்களிலுள்ள தமிழ் மக்களுக்கு தோள் கொடுத்து உதவ வேண்டியது வட தமிழ் ஈழத்திலுள்ள மக்களின் நீங்காக் கடமையாகும். அதற்கு முதற்படியாக ''வருமானத்தில் ஒரு வீதம்'' நிதிக்கு தொடர்ச்சியாக வழங்குவதற்கு தமிழ் சமுதாயம் முன்வரவேண்டும். வடக்கின் உதவிக்கரம்-கிழக்கை நோக்கி நீள வேண்டும்; தமிழ் மண் காப்பாற்றப்பட எழுபது இலட்சம் கைகளும் இணைய வேண்டும்;

ஆம், என்றும் ஒவ்வொரு தமிழனதும் இதயத்தில் இருத்த வேண்டிய —செயற்பட வேண்டிய கொள்கை— எங்கே எந்த நிலையில் எப்பதவியில் இருந்தாலும் அவன் செலுத்தக்கூடிய பங்களிப்பு -- வருமானத்தில் ஒரு வீதத்தை வளமார் தமிழ் ஈழத்துக்கு வழங்குவது தான்!

# இலங்கைத்தீவு ஒரே நாடல்ல...

—5-ம் பக்கத் தொடர்

என்று குற்றஞ்சாட்டப்படுகின்றதே!

சம்பந்தன்:- நகரசுத்தித் தொழிலாளி ஒருவனைச் சிங்களம் படி என்றுல் அதைத் திணிப்பது என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்வது.

சட்ட:- நீங்கள் சொல்வது, தமிழ் ஈழத்தில் திறமையான அரசு இயந்திரத்தை உருவாக்க வேண்டியே சில சந்தர்ப்பங்களில் தமிழ் அரசு அதிகாரிகள் சிலர் சிங்களம் கற்கலாம் என்று.

சம்பந்தன்:- அது சரி.

சட்ட:- கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில், லக்ஸல, போயாப் பொல, சலுசல போன்ற சிங்களச் சொற்கள் தமிழ் மொழிக்குள் நுழைக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும என்று கூறப்பட்டுள்ளதே!

சம்பந்தன்:- இந்த ஊடுருவல் தமிழ் மொழியின் தனித் தன்மையைக் கெடுத்து விடும். தமிழ் மொழியை எமது நாட்டில் பாதுகாக்கவும் பிரதேசத்தை காப்பாற்றவுமே நாம் பாடுபடுகின்றேம்.

சட்ட:- தமிழ் ஈழ இலட்சியத்தை அடைய வெளிநாட்டு உதவி கோரப்படும் என்று தேர்தல் விஞ்ஞாபனம் கூறுகின்றதே!

சம்பந்தன்:- உலக நாடுகளைச் சந்தித்து எமது இன்னல்களை விளக்கி, எமது இலட்சியத்தை அடையஆதரவு கோருவதில் என்ன தவறு உண்டு?

சட்ட:- வெளிநாட்டு உதவியுடன் இலங்கையைப் பிரித்துத் தமிழ் ஈழத்தை நிறுவ...

சம்பந்தன்:- அப்படி நாம் எண்ணவில்லை. தமிழினத்தின் சுதந்திரத்துக்குப் பாடுபடுவதே எமது எண்ணம். இலங்கையில் உள்ள தமிழர்களின் நாட்டை மீண்டும் சுதந்திர நாடாகச் செய்வதே எங்கள் கொள்கை.

சட்ட:- தமிழ்ஈழத்திற்கு வரும் வெளிநாட்டுத் தமிழர்களுக்கு ஊக்கம் அளித்து வழிகாட்ட ஒரு ஸ்தாபனம் நிறுவப்படும் என்று விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளதே?

சம்பந்தன்:- தமிழ் ஈழம் ஒன்று உருவாகும் பட்சத்தில், வெளிநாடுகளில் இருந்து வரும் தமிழர்களுக்கு உதவ வேண்டியது தமிழ் ஈழத்தின் கடமையாகும்.

சட்ட:- தமிழ் ஈழத்திற்கு வெளியில் வாழும் தமிழர்கள் மட்டும் தான் இங்கு வரலாம் என்பதுதான் தங்கள் கருத்தா?

சம்பந்தன்:- தமிழ் ஈழத்தில் வாழும சிங்கள மக்களுக்கு பிரஜா உரிமை வழங்கப்படும். தமிழ் ஈழத்திற்கு வெளியில் இருந்து வரும் தமிழ் மக்களுக்கு தமிழ் ஈழத்தில் வாழ சகல உதவிகளும் வழங்கப்படும். இது பற்றி உங்களுக்குத் தினமும் படிப்பித்துக் கொண்டு இருக்க முடியாது.

சட்ட:- தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் என்ற பெயரில் ஒரு ஸ்தாபனம் தமிழ் ஈழத்தில்தற்பொழுது இயங்குகின்றது?

சம்பந்தன்:- இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் கடந்த கலவரத்தில் துரத்தப்பட்டவர்களை குடியமர்த்துவதில் இந்த ஸ்தாபனம் ஈடுபட்டுள்ளது.

சட்ட:- அகதிகள் புனர்வாழ்வு என்ற பெயரில் இந்த இயக்கம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குடியேற்றம் நடத்துகின்றது பற்றி தெரியுமா?

சம்பந்தன்:- கடந்த கலவரத்தில் சிங்களப் பிரதேசங்களில் இருந்து அடித்து விரட்டப்பட்ட தமிழ் மக்களைத்தான் தமிழ்ப் பகுதிகளில் குடியேற்றுவதில் இவ்வியக்கம் ஈடுபட்டுள்ளது.

சட்ட:- புணுனை என்னுமிடத்திலும் கலபொடப் பகுதியில் இருந்து வந்த அகதிகள் குடியேற்றப்பட்டுள்ளனர் அல்லவா?

சம்பந்தன்:- புணுனை, எனது தொகுதியில் இல்லை. கல்குடாத் தொகுதியில் உண்டு. திரு. தேவநாயகத்தைக் கேட்டால் அவர் இது பற்றி உங்களுக்குச் சொல்வார்.

சட்டத்தரணி விஜயதுங்கா:- (கமிஷனரிடம்), இந்தக் குடியேற்றங்களால் தான் இனக் கலவரங்கள் உண்டாகின்றன. இன்று திரியாயில் பதட்ட நிலைமை நிலவுகின்றது. அந்த இடத்தை நீங்கள் போய்ப் பார்க்க வேண்டும்.

சம்பந்தன்:- பதட்ட நிலைமை பற்றிபேசுகின்றுர். உண்மையில்பதட்டநிலைமை எங்கு உண்டு, உள்ளதுபற்றி அவருக்குச் சொல்ல வேண்டியுள்ளது.

''திருமலைப் பிரதேசத்தில் அரசகாணிகளில்அத்துமீறிக் குடியேறுபவர்கள் பெரும்பாலோர் சிங்களவர்கள். அவர்கள் மீது அரசு எதுவித நடவடிக்கையும் எடுப்பது இல்லை. அரசும் உதவுகின்றது.

சட்ட:- அகதிகள் புனர் வாழ்வுக்காக தமிழர் விடுதலைக் கூட்டணி வட்சக்கணக்கில் பணம் சேர்க்கத் திட்டம் இட்டுள்ளதாக ''சன்'' பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகின்றதே.

கமிஷனர்:- அது ஒரு கௌரவமான திட்டம் தானே!

சட்ட:- இல்லை ஐயா. ஒரு பக்கத்தில் அகதிகள் புனர் வாழ்வு என்று சொல்லிக் கொண்டு இன்னெரு பக்கத்தில் திட்டமிட்ட குடியேற்றத்தைத் தமிழர் விடுதலைக் கூட்டணி செய்கின்றது.

கமிஷனர்:- இது பற்றி அரசாங்கம் கவனிக்க வேண்டும. நான் அல்ல.

சம்: அண்மையில் சிவில் உடையில் சென்ற பொலிஸ் அதிகாரிகள் மூதூரிலுள்ள புளியடிச்சோலை, சங்குவேலி ஆகிய கிராமங்களிலுள்ள தமிழர்களின் வீடுகளை நிர்மூலமாக்கினர். அரசாங்க வாகனத்தில் சென்ற இவர்கள், மூன்றுமணி நேரத்திற்குள் இந்த இருகிராமங்களையும் நிர்மூலமாக்கினர். அங்கிருந்த சிவன் ஆலயத்தின் சிலையையும் உடைத்தனர்!

இந்தஅநியாயங்களை புரிந்தோர் நிச்சயம் கடவுளுக்கு பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். கடவுள் தான் அவர்களை தண்டிக்கவேண்டும்.

குச்சவெளியிலுள்ள செம்மலை சிவன் கோவிலும் சேதப்படுத்தப்பட்டது. திருகோணமலையிலுள்ள பிள்ளையார் கோவில் சிலையும் உடைக்கப்பட்டது. சிலையை உடைத்ததோடு நின்றுவிடாமல், கோவில் சுவரில் 'கணபதிதெய்யோ நாண்டகியா' (பிள்ளையார் குளிக்கப் போய்விட்டார்) என்று சிங்களத்தில் நையாண்டி செய்து எழுதப்பட்டிருக்கிறது.

அக்குரஸ்ஸவிலிருந்துகண்ணீரும் கம்பலையுமாக வந்த தமிழர்களே திரியாயில் இப்பொழுது குடியேற்றப்பட்டிருக்கிறுர்கள். எமது சமுதாயத்தின் ஓர் அங்கமாக விளங்கும் அவர்களுக்கு வாழ்வளிக்கு முகமாகவே நாம் இக் குடியேற்றத்தை ஏற்படுத்திளேம்.

சட்டத்தரணியின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் திரு. சம்பந்தன் மேலும் கூறியதாவது.

இப்போது அமைச்சராக இருக்கும் திரு.தேவநாயகம் மிகக் குறைந்த பெரும்பான்மை வாக்குகளாலேயே கல்குடாத் தொகுதியில் வெற்றி பெற்றுர். அவருக்குத் தமிழ் மக்கள் சார்பில் பேசுவதற்கு அருகதை கிடையாது.

திரு. தொண்டமான் இந்திய வம்சாவளித் தமிழர்களின் தலைவர்களில் நடுவராக இருக்கலாம்.

எனக்குக் கராட்டி தெரியாது. தமிழ் மக்களுக்கு கராட்டி பழக்கும் இயக்கம் இங்கு இயங்குவதாகவும் எனக்குத் தெரியாது. இருந்தாலும் இன்றைய சூழநிலையில் தமிழமக்கள் கராட்டியைக் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியம் என்று தோன்றுகின்றது.

தமிழ் பேசும் மக்களின் இலட்சியத்தை அடைய ஒரு களமாகவே நாம் நாடாளுமன்றத்தைப் பாவிக்கிறேம். அதனுலேயே தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பிக்கள் புதிய அரசமைப்புச் சட்டத்துக்கு விசுவாசம் தெரிவித்துச் சத்தியப் பிரமாணம் செய்தனர்.

புதிய அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றியதில் தமிழ் மக்கள் பங்குபற்றவே இல்லை.

சட்ட:- தமிழ் ஈழத்தின் தலை நகரம் திருகோணமலையா?.

சம்பந்தன்:- தமிழ் ஈழம் நிறுவப்பட்டதன் பின்னர் தான் தலைநகரம் பற்றித் திர்மானிக்கப்படவேண்டும்.

## வாராந்தக் கருத்தரங்கு

இடம்: த. வி. கூ. தலைமைச் செயலகம், யாழ்ப்பாணம்.
நாள்: 21-10-78 சனிக்கிழமை மாலை 6 மணி.
தலைப்பு: ஜே. ஆரும் தமிழர்களும்.
பேசுவோர்: சி. கதிரவேற்பிள்ளை. கோவை மகேசன், தே. ப. அகஸ்தியன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இலங்கைத்தீவு ஒரே நாடல்ல!

# சிங்கள-தமிழ் ஒற்றுமை இங்கு நிலவியதுமில்லை!

## மேற்கே சிலாபம் முதல் கிழக்கே கும்புக்கன் ஆறுவரை ஆட்சி நடத்தியவர்கள் நாம்!"

### சன்சோனி ஆணைக்குழுமுன் சம்பந்தன் சாட்சியம்

**"இலங்கையைப் பொறுத்தவரை அதை ஒரு தீவாக கருதுகிறோமே தவிர — ஒரே நாடாக நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழர்களும் சிங்களவர்களும் ஒன்றாக ஒற்றுமையாக ஒரே நாட்டினராக வாழ்ந்ததாக சரித்திரமே கிடையாது. முன்னர் திருகோணமலைப் பகுதியில் தமிழ் ராச்சியம் இருந்தது. தமிழ் மன்னர்கள் தமிழ் ஈழ மண்ணை ஆண்டனர். சிலாபத்திலிருந்து கும்புக்கன் ஆறுவரை தமிழ்ஈழப் பிரதேசம் பரந்து விரிந்திருந்தது".**

—இவ்வாறு சன்சோனி ஆணைக்குழுமுன் சாட்சியமளித்த திருகோணமலை பா. உ. திரு. இரா. சம்பந்தன் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். அவர் சிங்கள இளைஞர் பேரவையின் சட்டத்தரணியான திரு. விஜயதுங்காவின் கேள்விகளுக்கு சூடாகவும் சுவையாகவும் பதிலளித்தார். அவர் கூறியதாவது:-

'நான் கூட்டணியின் சிரேஷ்ட அங்கத்தவர்களில் ஒருவன். தமிழரசுக் கட்சி, தமிழ்க்காங்கிரஸ் கட்சி ஆகிய கட்சிகளை ஒன்றுசேர்த்தே கூட்டணி உருவாக்கப்பட்டது. அதில் இ. தொ. கா. வும் அங்கம் வகிக்கிறது. அத்துடன் முஸ்லிம் இயக்கமொன்றும் அதில் அங்கம் வகித்தது.

தமிழ்மக்களின் சுதந்திரம், உரிமைகள் ஆகியன பறிக்கப்பட்டதன் காரணமாக தமிழ் மக்கள் மிகவும் அபாயகரமான சூழ் நிலையில் வாழ வேண்டிய கட்டத்தில் இருந்த போதுதான் கூட்டணி உருவாகியது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீருவதற்கு தனிநாடு ஒன்றுதான் முடிவானமுடிவு என்பதை தமிழ்த் தலைவர்கள் தீர்மானித்தனர்.

தமிழ் மக்கள் குடியரசு தினத்தைப் பகிஷ்கரித்தனர். அவர்கள் புதிய அரசியல் சட்டத்தை ஏற்காததினுலேயே குடியரசு தினத்தைப் பகிஷ்கரித்தனர்.

1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் கூட்டணி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போட்டியிட்டது. இம் மாகாணங்களில் பெரும்பாலும் தமிழ் மக்கள் ஒன்றாக வாழ்கின்றனர்.

சட்டத்தரணிவிஜயதுங்க: தமிழ் ஈழத்தைச் சமாதான முறையில் பெற முடியாவிட்டில் நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டாவது பெறுவோம் என்பதன் அர்த்தம் என்ன?

சம்பந்தன்:- "தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அஹிம்சையிலே அசையா நம்பிக்கை வைத்து உள்ளனர். தன்னைத்தானே வருத்துவதன் மூலம் தான் தமிழ் மக்கள் தமிழ் ஈழத்தைப் பெறுவர். என்றும் பலாத்காரத்தை அவர்கள் நாடப் போவது இல்லை"

சட்டத்:— "தமிழினத்தின் விடுதலை நேரடி நடவடிக்கையின் மூலம்தான் என்றால் சமாதான வழிகள் இல்லையா?"

சம்பந்தன்:- "இதற்கு மேல் உங்களுக்கு என்னால் விளங்க வைக்கமுடியாது."

கமிஷனர்: "நேரடி நடவடிக்கை என்றால் என்ன?"

சம்பந்தன்; "பலாத்காரத்தை என்றுமே தமிழர் விடுதலைக் கூட்டணி நம்பியது இல்லை. அஹிம்சை தான் கூட்டணியினரின் கொள்கை.

"பண்டா—செல்வா ஒப்பந்தத்தை எழுதியதன் மூலம் தமிழ் மக்கள் தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கச் சமாதான வழிகளை நாடினர். மீண்டும் சமாதான வழியை டட்லி—செல்வா ஒப்பந்தத்திற்குக் கையெழுத்து இட்டதன் மூலம் நாடினர்.

"இவை சரிவரவில்லை என்றவுடன் தமிழ் மக்கள் 1961ல் நேரடி நடவடிக்கையில் இறங்கினர். கச்சேரிகளுக்கு முன்னர் சத்தியாக்கிரகம் செய்தனர். அரசாங்க அலுவல்கள் இதனால் ஸ்தம்பித்தன. இதுதான் நேரடி நடவடிக்கை."

சட்டத்:- "தமிழ்ஈழத்தில் சிங்கள மக்கள் வாழ முடியுமா?"

சம்பந்தன்:- "நிச்சயமாக வாழ முடியும். இன்று தமிழர்களுக்கு இந்த நாட்டில் இடமில்லை. அவர்களுக்கென்று ஒரு நாடு தேவை. இதைத்தான் தமிழ் ஈழக் கொள்கை வற்புறுத்துகின்றது."

சட்டத்:- "தமிழ் ஈழம் நிறுவப்பட்ட பின்னர் சிங்கள ஏகாதிபத்தியம் அனுப்பப்படும் என்றால்?"

சம்பந்தன்:- "இந்த நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் பிரிட்டிஷார் எப்படிப் போனார்களோ அதுபோன்று தமிழ் ஈழம் நிறுவப்பட்ட பின்னர் சிங்கள ஏகாதிபத்தியம் வெளியேறிவிடும்"

சட்டத்:- "தேர்தல் விஞ்ஞாபனத்தில் சிங்கள ஏகாதிபத்தியம் வெளியேறும் என்று கூறப்பட்டுள்ளது?"

சம்பந்தன்:- "அது தமிழ் ஈழத்தில் வாழும் சிங்கள மக்கள் வெளியேற்றப்படுவர் என்ற கருத்தில் அல்ல. தமிழ் ஈழத்தில் சிங்கள மக்கள் தொடர்ந்து வாழ அனுமதிக்கப்படுவர். "வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் இது திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது. தமிழ் ஈழத்தில் தமிழ மொழி ஆளும் மொழியாக இருக்கும். அதே நேரத்தில் தமிழ் ஈழத்தில் வாழும் சிங்கள மக்களின் உரிமைகள், சிங்களப் பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் உரிமைகள் போன்று வழங்கப்படும்."

கமிஷனர்:- "[illegible] கள் அல்ல; சிங்கள ஏகாதிபத்தியத்தை விரட்டுவோம் என்று தான் விஞ்ஞாபனம் கூறுகின்றது."

சட்டத்:- "தமிழ் ஈழத்தில் தமிழர்கள் ஆட்சிதான் நடக்கும் என்று சொல்கிறீர்களா?"

கமிஷனர்:- "அப்படி இல்லை என்றால் எப்படி "தமிழ் ராஜ்யம்" என்று சொல்வது?

சம்பந்தன்:- "இன்று நம்மைச் சிங்களவர்கள் தான் ஆளுகின்றனர். இதில் சந்தேகமே இல்லை."

சட்டத்:- "இன்று மந்திரி சபையில் அங்கம் வகிக்கும் திரு. தொண்டமான். திரு. தேவநாயகம் ஆகியோர் யார்?"

சம்பந்தன்:- "தொண்டமான், தேவநாயகம் ஆகியோர் இன்று அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதால் சிங்களவர் ஆட்சி நடைபெறவில்லை என்று கூற முடியாது."

சம்பந்தன்;- "தமிழ் ஈழத்தில் வாழும் சிங்கள மக்களுக்குப் பூரண பாதுகாப்பு வழங்கப்படும். இன்றுயாழ்ப்பாண, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை மாவட்டங்கள் அனைத்திலும தமிழ் பேசும் மக்களே பெரும்பான்மையினர்."

சட்டத்: "தமிழ் ஈழம் அமைக்கவே தான் கடந்த தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை தமிழர் விடுதலைக் கூட்டணி கோரியதா?"

சம்பந்தன்:- "ஆம்"

சட்ட:- தமிழ் ஈழத்தில் வாழும் சிங்கள மக்கள் எந்த மொழியில் தமிழ் ஈழ அரசுடன் தொடர்பு கொள்ள அனுமதிக்கப்படுவர்?



சம்பந்தன்;- சிங்கள மக்கள் தங்கள் சொந்த மொழியில் தொடர்பு கொள்ள அனுமதிக்கப்படுவர்.

சட்ட;- அப்படி என்றால் தமிழ் ஈழ அரசில் பணியாற்றும் அரசு அதிகாரிகள் சிங்கள மொழி படிக்க நேரிடுமே.

சம்பந்தன்:- தமிழ் ஈழத்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் திறமையான நிர்வாகத்தை வழங்குவதற்காகத் தேவையான அரசு அதிகாரிகள் சந்தர்ப்பத்தின் பொருட்டு சிங்களத்தைப் படிக்க வேண்டிய தேவை ஏற்படலாம்.

சட்ட;- அப்படியானல் இன்று இலங்கை அரசு, சிங்களம் படிக்குமாறு தமிழர்களைக் கேட்பதில் என்ன தவறு உண்டு?

சம்பந்தன்:- தமிழர்களுக்கு என்று உருவாகும் நாட்டில்தான் தமிழ் அரசு அதிகாரிகள் சிங்களம்படிக்க வேண்டிய தேவை ஏற்படலாம்.

சட்ட:- தமிழர்களின் தொண்டைக்குள் சிங்களத்தைத் திணிக்க இலங்கை அரசு முயற்சிக்கின்றது.

—4-ம் பக்கம் பார்க்க

## அகதிகள் புனர்வாழ்வு நிதி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆவரங்கால் மாநாட்டில் அகதிகள் புனர்வாழ்வுக்கு வருமானத்தில் ஒரு சதவீத நிதியை தமிழ் மக்களிடம் திரட்ட வேண்டுமென முடிவு செய்யப்பட்டதை நீங்கள் அறிவீர்கள்.

முப்பத்தைந்து இலட்சம் தமிழ்ப்பேசும் மக்கள் வாழும் இந்நாட்டில் மூன்றரை இலட்சம் மக்களாவது இப்பணியில் நேரடிப் பங்கு கொள்ளுதல் வேண்டும்.

அதாவது தங்கள் மாதாந்த வருமானத்தில் ஒரு சதவீதத்தை இந்த நிதிக்குக் கொடுத்து உதவ வேண்டும்.

தொகுதிகள் தோறும் கூட்டு விவசாயப்பண்ணைகள், கைத்தொழில், கடற்தொழில் அபிவிருத்தி நிலையங்கள் ஆகியன ஆரம்பித்து நடத்துவதற்கு இந்நிதி பயன்படுத்தப்படும். இதற்கான நல்ல திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

இதற்கென நியமிக்கப்பட்ட தொண்டர்கள் உங்கள் இல்லங்களுக்கு வருவார்கள் இவர்களிடம் உங்கள் பங்கை அளித்து இப்புனிதப் பணியில் பங்கு கொள்ளுங்கள்.

—சி. கதிரவேலுப்பிள்ளை பா. உ.
இணைப்பொருளாளர் த. வி. கூ.





துரித சலவைக்கு மில்க்வைற் சலவைபவுடர் வாங்கி உபயோகியுங்கள், பல அளவுகளில் விற்பனையாகின்றது.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுபது கோடி கத்தோலிக்க மக்களின் தலைவர் எப்படித் தெரிவுசெய்யப்படுகிறர்?

## பாப்பரசர் தெரிவுசெய்யப்படும் முறை!

உலகடங்கிலுமுள்ள எழுபது கோடிக் கத்தோலிக்க மக்களின் ஆத்மீக தலைவராக புதிய பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். வத்திக்கானில் பாப்பரசர் தெரிவு எவ்வாறு நடைபெறுகிறது என்பதை இக் கட்டுரை விளக்குகிறது. இதைஎழுதியவர் சென்னை ஆர்ச் பிஷப் தவத்திரு. அருளப்பா அவர்களாகும்.

**போப்** கத்தோலிக்கக் கிறிஸ்துவர்களுக்கு ஜகத்குரு ஆவார். யேசுவின் போதனைகளையும், அவரது கட்டளைகளையும் பாதுகாப்பது போப்பின் பொறுப்பு. தவறுன கொள்கைகளைத் தடுத்து, உண்மையை உலகுக்கு நிலைநாட்டுவது அவரது கடமை. உதாரணமாக, செயற்கை முறையில் குடும்பக் கட்டுப்பாடு போன்ற விஷயங்களில் அவரது தீர்ப்பே முடிவானது.

போப் ரோமாபுரியின் இடையே உள்ள வாடிகன் நகரில் வாழ்வார்.

போப் பாலுக்கு முன்பாக 261 போப்கள் இருந்திருக்கின்றனர். அவரது உதவியாளர்களான கார்டினல்கள் உலகில் பல நாடுகளிலும் இருக்கிருர்கள். அவர்கள் நூறுக்கும் மேற்பட்டவர்கள். இந்தக் கார்டினல்கள் தான் அடுத்த போப்பைத் தீர்மானிப்பார்கள்.

போப் பதவி ஏற்பவர்களுக்குச் சில அடிப்படைத் தகுதிகள் தேவை எந்த விஷயத்தையும் அவசரப்படாமல் ஆராய்ந்து செயல்பட வேண்டும். கத்தோலிக்கக் கிறித்துவராக இருக்க வேண்டும். பரிசுத்த வாழ்க்கையோடு உண்மையான தெய்வ நம்பிக்கை உடையவராய் இருக்கவேண்டும். மற்றவர்கள் மனம் புண்படாமல் உண்மையைக் கூறும் ஆற்றல் கொண்டவராய் இருக்க வேண்டும். அறுபது வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.

போப் தேர்தல் வாடிகன் நகரத்தில் மைக்கேலாஞ்சிலோவின் பிரசித்தி பெற்ற ஓவியங்களைப் பெற்றிருக்கும் சிஸ்டைன் சாப்பல் என்ற மாதா கோயிலில் நடக்கும். தேர்தலுக்கு முன் எல்லோரும் மூன்று அல்லது நான்கு நாட்கள் தீவிரமாக ஜபம் செய்வார்கள். பின்பு தேர்தல் காகிதத்தில் தாங்கள் தேர்ந்தெடுத்த நபரின் பெயரைக் குறிப்பிடுவார்கள். தேர்தல்மிகரகசியமாக இருக்கும். எந்த நபருக்கு மூன்றில் இரண்டு பங்கும் மேலும் ஒரு வோட்டும் கிடைக்கிறதோ அவரே போப்பாகத் தேர்ந்தெடுக்கப்படுவார். தேர்ந்தெடுக்கப் பட்ட நபரின் சம்மதமும் இதற்குத் தேவை.

போப் உலகின் எந்த நாட்டு அரசியலிலும் தலையிடுவதில்லை. உலக சமாதானத்துக்குப் பாடுபடுவார். யுத்தம், பஞ்சம், என்று எந்த நாட்டில் ஏற்பட்டாலும் அதில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு மக்கள் நல்வாழ்வு பெற முயற்சி செய்வார்.

கத்தோலிக்க கிறிஸ்துவர்களின் மதப்பிரச்சினைகளில் அவர் தலையிட்டு அமைதியை நிலைநாட்டுவார்.

போப் பதவி வகிப்பவர்கள் விரும்பினுல் தாங்களாகவே பதவியை ராஜினுமா செய்யலாம். ஆனுல் அப்படிச் செய்யாத மட்டில் கடைசி மூச்சுவரை அவர் தான் போப்.

மறைந்த போப்பாண்டவர் பாலிடம் கிறுஸ்துவர்களான உலகத் தலைவர்கள் பலமுறை யோசனைகள் கேட்டுள்ளனர். ஜிம்மி கார்ட்டர் கூட ஆலோசனை பெற்றுள்ளார்.

போப் பதவியிலுள்ளவர்களுக்கு அனேகமாக நான்கு ஐரோப்பிய மொழிகள் (பிரெஞ்சு, ஆங்கிலம், ஸ்பானிஷ், ஜெர்மன்) தெரிந்திருப்பது அவசியம்.

போப்புக்கு அன்றுட அலுவல்கள் மிகவும் அதிகம். தினம் பலநாடுகளிலிருந்தும் பிஷப்புகளும் மதகுருமார்களும், வேறு பல முக்கியஸ்தர்களும் அவரைத் தனியே சந்தித்துத் தங்கள் நாடு, மதம், சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஆலோசனை கேட்பார்கள். இப்படிப் போப்புடன் தனியாக அளவளாவுவதை "பிரைவேட் ஆடியன்ஸ்" என்று குறிப்பிடுவது வழக்கம். இது தவிர குறைந்தது இருபதாயிரம் மக்கள் வாரம் ஒரு முறை அவரைத் தரிசிப்பார்கள், புதன்கிழமை அன்று. இதற்கே அவருக்கு நேரம் போதாது. தினமும்ஒருமணி நேரமாவது அவர் ஜெபம் செய்வது வழக்கம். பல செய்திப் பத்திரிகைகளைப் படித்துப் பல தேசங்களில் நிலவும் குழப்பங்களைப் போக்கவழிகளைத்தொகுத்து எழுதி அந்தந்தத் தேசங்களின் மதத்தலைவருக்கு அனுப்புவார். அவர் படுக்கப் போகும்போது இரவு ஒரு மணி ஆகிவிடும்,

நான் தனியாக 1976ஆம் ஆண்டு பதினைந்து நிமிடம் மறைந்த போப்பாலிடம் பேசினேன். சென்னை மக்களுக்கு அவர் தம் ஆசிகளை வழங்கினுர்.

போப்பின் அதிகாரத்தை ஏற்காத பிரிவு கிரீஸ் நாட்டில் உள்ளது. அதற்கு கிரீக் ஆர்த்தோடாக்ஸ் சர்ச் என்று பெயர். அவர்களின் முக்கிய பிரதிநிதிகள் ஒரு சமயம் போப் பாலைப் பார்க்க வந்தார்கள். யாரும் எதிர்பார்க்காத வண்ணம், அந்தக் குழுவின் தலைவர் பாதத்தில் போப் பால் விழுந்துஅவரதுபாதங்களை முத்தமிட்டார். கத்தோலிக்கச் சரித்திரத்திலேயே இது போன்ற சம்பவம் நடந்ததேயில்லை. "நாம் எல்லோரும் சமமாக இருந்து உலக சுபிட்சத்துக்குப் பாடுபட வேண்டும்" என்று அவர் அன்று கூறியதிலிருந்து பகை உணர்ச்சி மறைந்து கொண்டே வருகிறது. மிக விரைவில் பாக்கியுள்ள சிறிதளவு பகைமை உணர்ச்சியும் மறைந்து விடும்.

இந்த நிகழ்ச்சியை ஆர்ச் பிஷப் தவத்திரு அருளப்பர் கூறி முடித்த போது அவர் கண்களில் நீர் திரை இட்டிருந்தது.

(நன்றி: கல்கி)

# கலாநிதி இந்திரபாலாவுக்கு ஓர் கனிவான வேண்டுகோள்!

இலங்கைத்தீவில் 13ம் நூற்றுண்டில் யாழ்ப்பாண அரசு தோன்றுவதற்கு முன்பு, கி.பி 8ம் நூற்றுண்டிலேயே இந் நாட்டில் தமிழர் குடியேற்றமும் தமிழர் செல்வாக்கும் கொடிகட்டிப்பறந்திருக்கிறது. வடமேற்கு பிரதேசமான புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு போன்ற பகுதிகளிலும், கிழக்கே திருகோணமலை மாவட்டத்திலும், அனுராதபுரம், பொலன்னறுவை மாவட்டத்திலுமே தமிழ்க்குடியேற்றங்கள் அன்று நடைபெற்றன. அனுராதபுரமும், பொலன்னறுவையும் அன்று தமிழர் செல்வாக்குடன் திகழ்ந்ததை தொல்பொருளாய்வுகள் எடுத்துக் கூறுகின்றன. இன்று நாம் காணும் ஐந்து ஈஸ்வரங்கள் மட்டுமன்றி, இன்னும் எத்தனையோ சிவாலயங்கள் இந்தப்பகுதியிலிருந்ததற்கு சான்றுகள் உள்ளன. அனுராதபுரத்தில் தமிழர் செல்வாக்குடன் வாழ்ந்ததற்கு ஆதாரமாக புதைபொருளாய்வின் போது கண்டெடுக்கப்பட்ட சாசனங்களில் "தெமிழப் பற்று; தமிழர் இடம்" என்ற குறிப்புக்கள் அவற்றில் காணப்படுகின்றன.

இவ்வாறு இலங்கை முழுவதும் செல்வாக்குடன் மிளிர்ந்த தமிழர்கள் காலப்போக்கில் சிங்களக்கலப்பினுல் இனம் மாறியிருக்க வேண்டும். அல்லது சிங்கள அரசுகளின் படையெடுப்பினுல் வடக்கே குடிபெயர்ந்திருக்க வேண்டும்!"

—இவ்வாறு யாழ் வளாக வரலாற்றுத்துறைப்பேராசிரியர் கலாநிதி கா. இந்திரபாலா அவர்கள் யாழ் வீரசிங்க மண்டபத்தில் கலாநிதி சி. பத்மநாதனின் 'யாழ்ப்பாண அரசு' எனும் நூல் பற்றி ஆய்வுரை நிகழ்த்திய போது தமிழர்களின் தொன்மை பற்றி அழகாகக்குறிப்பிட்டார்.

செழிப்பு மிக்க தென்னிலங்கையில் முதலில் குடியேறி செல்வாக்குடன் வாழ்ந்த தமிழர்கள் சிங்கள இனக்கலப்பினுல் சிங்களவர்களாக மாறிவிட்டார்கள்— எஞ்சியவர்கள் வடக்கு நோக்கி ஓடிவந்தவர்கள் தமது அரசைநிலைநாட்டித் தனித்துவத்தைப் பாதுகாத்துக் கொண்டவர்கள் என்பது தான் கலாநிதி இந்திரபாலா அவர்களின் கருத்தாகும்.

நீர்கொழும்பு, சிலாபம் பகுதியில் தமிழர்கள் சிங்களவர்களாக இனம் மாற்றப்பட்ட நிகழ்ச்சி நம் கண்முன்னுல் நிகழ்ந்த சம்பவம்—

இன்று— எஞ்சியுள்ள வடக்கு, கிழக்கு பகுதிகளிலுமிருந்தும், தமிழினத்தைப் பூண்டோடு அழிப்பதற்கு சிங்களவர்கள் திட்டமிட்டு வெறி பிடித்து ஆக்கிரமிப்பு நடவடிக்கையிலீடுபட்டிருக்கிருர்கள்.

வடக்கு கிழக்கு என்று அழைக்கப்படும் இந்தத் தமிழ் நிலத்தை— அதாவது தமிழ் ஈழத்தை— எப்படியாவது காப்பாற்றினுல் மட்டுமே தமிழினத்தின் தனித்துவம் காப்றப்படும்; இன்றேல் தென்னிலங்கையில் வாழ்ந்த தமிழர் எப்படியாஞர்களோ அதே நிலையே வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழர்களுக்கும் ஏற்படும்.

ஒன்றில் சிங்கள இனத்தின் வயிற்றுக்குள் ஜீரணமாக வேண்டும்— அல்லது கடலில் விழுந்து அழிய வேண்டும்.

இந்த அபாய நிலையிலிருந்து தமிழினம் தப்பிப் பிழைத்திடுவதற்கு தமிழ் ஈழம் மீண்டும் தனிநாடாக வேண்டும்; தமிழ் ஈழ அரசு மீண்டும் உருவாக வேண்டும்.

வரலாறு நமக்கு விடுக்கின்ற எச்சரிக்கையிலிருந்து நாம் பாடம் படிக்க வேண்டும்.

எனவே கலாநிதி இந்திரபாலா போன்ற வரலாற்று அறிஞர்கள் வெறுமனே வரலாற்று ஆய்வுடன் மட்டும் நின்று விடாது, தமிழினத்தின் நிலையான வாழ்வுக்கு உழைப்பதற்கு முன் வரவேண்டும். தமிழீழ விடுதலை இயக்கத்தில் தமது பங்கினைச் செலுத்த அறிஞர் குழாம் முன்வர வேண்டும் தமிழீழ விடுதலை அணியுடன் கலாநிதி இந்திரபாலா [illegible] வாரென்று எதிர்பார்க்கின்றோம்.

—7ம் பக்கத் தொடர்

சிங்கா, நிசங்கமல்லனின் கந்தளாய்க் கல் ஆசனக் கல்வெட்டு) சிவனின் சக்தியாகிய பார்வதி தேவியின் பெயரில், அன்ன சத்திரம் ஒன்றையும் நிசங்கமல்லன் இங்கு அமைத்தான் என இக்கல்வெட்டுக் கூறுகின்றது.

எனவே கந்தளாய் தமிழ்க் கிராமம் அல்ல எனக் கூறுவோர் வரலாற்றை மறைத்து த்திரித்துக் கூறுபவர்களாவர்.

யாழ்ப்பாணத்து அரசர்களின் ஆட்சியில், கந்தளாயிலும், தம்பலகாமத்திலும் திருகோணமலையிலும் உள்ள சிவன் கோவில்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டன.

-மறவன்புலோ சச்சிதானந்தன்.


## பனம் விதைகள் வேண்டுமா?

நீங்கள் உங்கள் வெறுந் தரைகளிலும், வளவு எல்லைகளிலும் பனம் விதைகளை நாட்டி பனையபிவிருத்தி செய்ய விரும்பினுல் உங்கள் சபைகள், மன்றங்கள் மூலம் எமக்கு உடனடியாக அறிவியுங்கள். தங்களுக்கு வேண்டிய பனம்விதைகள் தந்துதவுவோம்.

மில்க்வைற் பனையபிவிருத்திப் பகுதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழுணர்வு காப்பாற்றப்பட்டால்தான் அதிலிருந்து ஒரு நாட்டை அமைக்கமுடியும்! தமிழ்மொழியின் நிலையைத் தாழ்த்திவிடாதீர்!"

தமிழ் மொழி உலக மெல்லாம் பரந்து வாழ்ந்த மொழி, கிரேக்கம், லத்தீன், எபிரேயம் போன்ற மிகப் பழைய மொழிகளிலே தமிழ் மொழி ஊடுருவி நிற்கிறது. ஆங்கில மொழியிலே ஏறத்தாழ இரண்டாயிரம் சொற்களுக்கு மேல் தமிழ்ச்சொற்கள் போய் வழங்கி வருகின்றன. அதாவது பாருங்கள், இந்த இரும்புத்துண்டுக்கு தமிழிலே "பார்" என்று பெயர். பார் என்று சொன்னுல் இரும்புச் சட்டம்— இரும்புத்துண்டு.

"பாருக்கு நெக்குவிடாப்பாறை பசுமரத்து வேருக்கு நெக்கு விடும்"

என்பது ஔவையாருடைய பாட்டொன்று. அதிலே பார் என்ற சொல் இருக்கிறது. பாருக்குநெக்குவிடாப் பாறை— இரும்புச் சட்டத்தினுலே போட்டு நாம் நெட்டினுலும் கூட அந்தப்பாறை இடைவிடாது. ஆனுல் ஒரு பசிய மரத்தினுடைய வேர் அதற்குள்ளே போனுல் அந்தப் பாறை பிளந்து போகும் என்பது அந்தப் பாட்டினுடைய கருத்து. அந்தப் பார் என்கிற சொல் கடைசியிலே கொஞ்சம் ஈறுதிரிந்து பாறை என்று வழங்கியது. அப்புறம் கடப்பாறைஎன்று இப்பொழுது வழங்குகிறது. அதாவது இருக்கலாம்.

ஆனுல் இந்தச் சொல் கிரேக்கத்தில் பார் என்று வழங்குகிறது. பார் என்று சொன்னுல் இரும்புச் சட்டம். இந்த பார் என்கிற சொல்தான் ஆங்கிலத்திலே இப்பொழுது BAR என்று வழங்குகிறது. இரும்புச் சட்டத்திற்கும், அந்த இரும்புச் சட்டம் போல் நீண்ட அந்தப் பொருளுக்கும் BAR என்று சொல்கிருர்கள்.

அதேபோல் "மாத்திரை" என்கின்ற— ஒரு சொல்: அந்த மாத்திரை என்கின்ற சொல் அளவு என்ற பொருளில் இருக்கிறது. தொல்காப்பியத்திலே "மா" என்பது அதற்குப் பெயர். மாத்திரை— அளவு எழுத்துக்களிலே கூட ஒரு மாத்திரை எழுத்து; இரண்டு மாத்திரை எழுத்து; குறில் எழுத்துக்களெல்லாம் ஒரு மாத்திரை எழுத்து. நெடில் எழுத்துக்களெல்லாம் இரண்டு மாத்திரை எழுத்து என்று அளவு சொல்வார்கள்.

மருந்துகளிலே மாத்திரைகளைப் பார்க்கிருேம். நம்முடைய விரல்களிலே ஒரு சிட்டியை எடுத்து நாம் பருந்தாகக் குடிக்க வேண்டும் என்று இருந்தால், அந்த அளவு மாறிவிடும். பலருடைய கை பெரிதும் சிறிதுமாக இருக்கும். அளவு மாறிவிடும் என்பதற்காக மருத்துவர்கள் என்ன செய்தார்கள்? அந்த மாத்திரையை அளவுபடுத்தி அதை உருண்டையுருண்டையாக உருட்டிப் போடுவார்கள். எனவே அதற்கு மாத்திரை என்று பெயர்.

இந்த மாத்திரை என்ற சொல் கிரேக்கத்திலே "மாத்திரோன்" என்று திரிந்துவழங்குகிறது. கிரேக்கத்திலே ஏன் வழங்குகிறது என்று சொன்னுல், தமிழர்கள் கிரேக்கத்தோடு தொடர்பு கொண்டவர்களாக இருந்தார்கள். ஏராளமான தமிழ் நூல்கள் அந்த பிளேட்டோவினுடையஅக்கடமியில் இருந்ததாக, அவருடைய நூலகத்தில் இருந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் குறிக்கிருர்கள்.

"அக்கடமி" என்ற சொல்லுக்கே என்ன பொருள் வைத்திருக்கிருர்கள்? பூந்தோட்டம் என்று பொருள். நீங்கள் ஆங்கிலத்தை எடுத்துப் பார்த்தீர்களானுல் தெரியும். பிளேட்டோவினுடைய பூந்தோட்டத்தில் தான் சாக்கிரட்டீஸ், அரிஸ்ரோட்டில் போன்றவர்கள் எல்லோரும் வந்து ஒன்ருகச் சேர்வார்கள், எனவே அந்தப் பிளேட்டோவினுடைய பூந்தோட்டத்தில் அவர்கள் அறிஞர்கள் எல்லோரும் ஒன்ருகச் சேருகிறதனுலே அந்தப் பூந்தோட்டத்திற்கு அக்கடமி என்று பெயர். அக்கடமி என்ருல் பூந்தோட்டம், அந்தப் பூந்தோட்டத்திலே கூடுகின்ற அறிஞர் கூட்டம் என்று பெயராகி கடைசியிலே அக்கடமி என்பதற்கே "அறிஞர்கள் கழகம்" என்று பெயர் வந்துவிட்டது.

மாத்திரை என்பது கிரேக்கத்தில் மாத்திரோன் என்றும், லத்தீனில் மாற்ரன் என்று ஆகி ஆங்கில தான்ஸ் தானியாவில் மாற்றர் என்ருகி, ஆங்கிலத்திலே இப்பொழுது மீற்றர் என்று இருக்கிறது. இதே மீற்றர் என்ற சொல்லை நாம் சொல்லுகிருேம். ஆனுல் மாத்திரை என்ற சொல்லை நாம் சொல்ல மறுக்கிருேம். அல்லது மாற்றர் என்ற சொல்லுக்கு இந்தமாத்திரை தான் அடிப்படை என்பதை நாம் தெரிந்து கொள்ள விரும்பவில்லை. GEOMETRY, TRIG NOMETRY, என்ற அந்தச் சொற்களில் எல்லாம் இருக்கின்ற அந்த METRY என்ற பின்னெட்டுச் சொல்,

அதே போல் தொலைவு என்று சொல்லுகிருர்கள். அந்த தொலைவு என்ற சொல்தான் கிரேக்கத்தில் "தொலாஸ்" என்று வழங்குகின்றது. அதுதான் இப்பொழுது TELEPHONE, TELEGRAME, TELEPATHY என்கிற சொற்களிலே இருக்கின்ற அந்த TELE என்கிற முன்னெட்டுச் சொல்.

இப்படி ஏராளமான தமிழ்ச் சொற்கள் மேற்கு நாடுகளிலும் மிகப் பழைய மொழிகள் போல் வழங்கி அந்த மொழிகளை வளம் படுத்திக் கொண்டிருக்கும். அந்த நிலையிலே நம்முடைய அறியாமையாலும், சோம்பலாலும், ஒரு கவனமின்மையாலும் நம்முடைய சொற்களை நாம் கொஞ்சங் கொஞ்சமாகத்தவிர்த்துக்கொண்டு வருகிருேம். இப்படித் தவிர்க்கத் தவிர்க்க நம்முடைய தலைவர் அவர்கள் சொன்னது போல், தாசர்



காலத்து ஆங்கிலம் இன்றைக்குச் சொன்னுல் தெரியாது. அதே போல் இன்னும் கொஞ்ச நாள் போன பின்னுல் சேக்ஸ்பியர் நூல்களைப் படிப்பதற்குக் கூட மக்களுக்குத் தெரியாது போய்விடும். அவ்வளவு மருவி வருகிறது அந்த மொழி ஆனுல் தமிழ் மொழி மிகவும் விழிப்பாக, செந்தமிழ் மொழியாக வரையறுக்கப்பட்டு பேசப்படுகிறது; எப்படிப் பேசினுலும், எழுதுகிறதை மட்டும் அல்லது அவையிலே ஏறிப் பேசுகிறதைமட்டும்செந்தமிழில் பேச வேண்டும், ஒழுங்கான தமிழில் பேசவேண்டுமென்று புலவர்கள் வரையறுத்து விட்டார்கள்.

நான் சிங்கப்பூர் போயிருந்த போது அங்கே "தமிழ் நேசன்" "தமிழ் முரசு" போன்ற அழகான தமிழ்ப் பெயர்களைக்கொண்ட தாள்கள் இருக்கின்றன. இங்கு வந்துபார்த்தேன், ஏதாவது ஒரு தமிழ்ப்பெயர் சூட்டிய ஒரு தாள் இருக்குமா என்று பார்த்தேன். இங்கு "தினபதி" என்று ஒரு தாள். "வீரகேசரி" என்று ஒரு தாள். இந்தத் தாள்கள் எல்லாம் தமிழ் மொழிகளைத் தங்களுடைய பெயர்களாகச் சூட்டிக்கொண்டிருக்கவில்லை. "ஈழநாடு" என்கிற ஒரேயொரு தாள் மட்டும்தான் தூய தமிழ்ப் பெயராகச் சூட்டிக் கொண்டிருக்கிறது. இது எனக்கு மிகக்கவலையாக இருக்கிறது.

உண்மையாகத் தமிழனுக்கு அவர்களுடைய மொழி நிலையிலே ஏற்பட்ட ஒவ்வொரு வீழ்ச்சியும் அவனுடைய இனத்தை அழிக்கிற [illegible] வொரு வீழ்ச்சியாக இருக்க வேண்டும். அந்தத் தமிழ்த் தாளை எடுத்துப் பார்த்தேன். முதல் பக்கத்திலே ஒருவேடிக்கைக்காகக் கணக்குப் போட்டுப் பார்த்தேன். ஏறத்தாழ 200, 250 பிழைகள் அதிலே இருந்தன. நான் ஒரு பெரிய புலவன்: அல்லது அந்த மொழியைப் புலவர்கள் நடையிலே எழுத வேண்டும் என்று சொல்லவில்லை. கொச்சைத் தமிழாகவோ, தவருன சொற்களாகவே எழுதக் கூடாது.

அதை அப்படி எழுதினுல் மொழி முதலிலே அழியும், அடுத்தபடி கருத்து அழியும். அடுத்தபடி அந்தக்கருத்தைத் தோற்றுவிக்கின்ற அந்தஇனம்வெந்துபோகும். எனவே அந்த இனம் வேறு ஒரு மொழியைப் பற்றிக் கொள்ள வேண்டியிருக்கும். அப்போது வேறு ஒரு இனத்திற்கு அடிமையாகப் போக வேண்டியிருக்கும்.

மொரீசியஸ் போன்ற தீவுகளிலே வாழ்கின்ற தமிழர்கள், அந்தமான் போன்ற தீவுகளிலே வாழ்கின்ற தமிழர்கள் பலர் தங்களுடைய பெயரையும் இனத்தையும் மறந்துவிட்டார்கள். பலர் பேச்சையே மறந்துவிட்டார்கள். தமிழை அவர்கள் பேசவே முடியாது. அப்படி அவர்கள் இருக்கிருர்கள். இப்படிக் கொஞ்சங் கொஞ்சமாகப் போனுல் கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி, அதுவும தேய்ந்து சிற்றெறும்பாகி, அதுவும் தேய்ந்து ஒன்றுமில்லாமல் போனது போல் கடைசியிலே தமிழினம் என்று ஒன்று இருந்தது. அது ஒரு காலத்திலே மிகச் சிறந்திருந்தது. பிறகு படிப்படியாக வீழ்ந்துபோனது. உண்மையாக அடியோடு இப்போது இல்லாமற் போய் விட்டது என்று வரலாற்றிலே குறிக்கவேண்டிய ஒரு அவல நிலை தமிழனுக்கு ஏற்படும்.

நீங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் நாம் எப்படியாவது சில நிலைகளை அரசியல் உரிமைகளைப் பெற்றுவிட்டால் தமிழ்மொழியைத் திடுமென ஒரே நாளிலே மந்திரக்கோலெடுத்து மாற்றிவிட முடியுமென்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். அது தவறு. உணர்வு அழிவு எப்பொழுதும் ஒரு நாளிற் திருத்தப்படுகின்ற முடிவன்று. படிப்படியாக அந்த உணர்வு வீழ்ச்சியைக் காத்துக் கொள்ளவேண்டும். அப்போதுதான் அந்த இன நிலை ஒரு வலுவான இடத்தைப் பெறும். அதிலிருந்து தான் ஒரு நாட்டைஅமைக்க முடியும். எனவே அருள் கனிந்து உங்களை வேண்டிக் கொள்வதெல்லாம் அடிப்படையான மூல நிலையாகிய அந்த மொழி நிலையை நீங்கள் தாழ்த்தி விடாதீர்கள். இப்படியிருக்கின்ற அந்த உண்மைகளைச் சொல்வதற்காகத்தான் நான் உங்களுக்கு இந்த மொழியைப் பற்றி இவ்வளவு ஆய்வான நிலைகளைச் சொன்னேன்.

**தென்மொழி பெருஞ்சித்திரனர்**

## கந்தளாய்-தமிழர்களின் உரிமைச் சொத்து

விஜயராஜ சதுர்வேதமங்களம் என்ற நீண்ட பெயர்தான் கந்தளாயின் பழைய பெயர்— சோழர் ஆட்சி, இலங்கையில் நிறுவப்பட்ட பொழுது, பிராமணர்களின் குடியிருப்பாகக் கந்தளாய் விளங்கியது. நான்கு வேதங்களிலும் வல்லவர்கள் இங்கு இருந்தவர்கள். இதனுல் சதுர்வேதமங்களம் என இவ்வூர் அழைக்கப்பட்டது. அங்குள்ள சிவன் கோவில் தென் கைலாசம் என அழைக்கப்பட்டது.

பாலமோட்டையில் உள்ள தமிழ்க்கல்வெட்டு, 11ம், அல்லது 12ம் நூற்ருண்டைச்சேர்ந்தது. பொலநறுவையில் இருந்து ஆட்சி செய்த (கி.பி. 1055-1110), முதலாம் ஜயபாகு (1110-1111) ஆகிய இரு மன்னர்களின் ஆட்சியின் 42வது ஆண்டில் எழுதப்பட்ட இக்கல்வெட்டில் சதுர்வேதமங்களம் எனப்படும் கந்தளாய் இந்துக்கள் வாழ்ந்தஇடம்எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பரணவிதானே என்கிற சிங்கள வரலாற்ருசிரியர் இதனைக் கூறியுள்ளார்.

இரண்டாம் கஜபாகு கி. பி. (1132-1153) பொலன்னறுவையில் இருந்து ஆட்சிசெய்தானாயினும், பட்டாபிஷேகமின்றியே ஆட்சிசெய்தான். இவனது தந்தையரான முதலாம் விக்கிரமபாகுவைப் (1111-1132) போன்று, இவனும் சைவசமயத்தைச் சார்ந்தவனுக இருந்தான், பௌத்த மதத்தவர் இவனது ஆட்சியை விரும்பவில்லை. எனவேஇடையிலேயே ஆட்சியைத் துறந்தான். தனது ஆட்சியை முதலாம் பராக்கிரமபாகுவிடம் கையளித்துவிட்டுக் கந்தளாய்க் கிராமம் சென்ருன் அங்கு சைவசமயத்தைக் கடைப்பிடித்துவாழ்ந்தான். கந்தளாயில் சைவசமய வாழ்வை மேற்கொண்டான். ஆச்சிரமம்அமைத்து வாழ்ந்தான்—

நெடுங்காலமாகத் தொடர்ந்து கந்தளாய், சைவசமயிகளின் ஊராக இருந்து வந்தது. கந்தளாயில் உள்ள கல் ஆசனக் கல்வெட்டில், நிசங்கமல்லன், இந்த ஊரைச் சதுர்வேதப்ரியபுரம் என அழைக்கின்ருன். (D. M. be Z. விக்கிரம

—6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமிர் விஜயம்....

—1-ம் பக்க தொடர்

ஆண்டுகளில் தங்களது பிரதேசங்களின் பெருமளவு பகுதிகளை தமிழ்மக்கள் இழந்து விட்டனர்.

''ஈழம் வாழ்தமிழ் மக்களின் அவலநிலையையும்அவர்கள் எதிர்நோக்கும் ஆபத்துக்களையும் எடுத்துக் கூறுவதற்காகவே அமெரிக்காவுக்கு நான் இப்பொழுது விஜயம் செய்துள்ளேன்.

''எங்களது பிரச்சினைகளுக்கு ஒரே ஒரு தீர்வுதான் காணமுடியும். அது தமிழீழமே. அதற்கான போராட்டத்தை நாங்கள் தொடர்ந்து நடத்துவோம். இதற்கான நிதிவளம், கைத்தொழில் மூலவளம், விவசாய வளம் எம்மிடம் நிறைய உண்டு.

''அமெரிக்க ராஜாங்க இலாகாவின் அழைப்பின் மீது எனது துணைவியாருடன் அக்டோபர் மாதம் முதலாம் திகதி இங்கு வந்தேன். ராஜங்க இலாகாவின் மனித உரிமைகள் பிரிவுத் தலைவர்களுடனும், செனட் சபை மற்றும் மக்கள் சபையின் வெளிநாட்டுக்குழுத் தொடர்பு அதிகாரிகளுடனும் உலக வங்கி மற்றும் சர்வதேச உதவி தொடர்பான அமெரிக்க முகவர் நிலையங்களின் அதிகாரிகளுடனும் விரிவாகப் பேச்சுவார்த்தை நடத்தி எமது நிலையைத் தெளிவாக விளக்கியுள்ளேன்.

''கடந்த வருடம் ஆகஸ்ட் மாதத்தில் நாட்டில்முன்னர் என்றுமே நடைபெறாத இனக்கலவரம் மூண்டது. தமிழரின் உயிரும் உடைமைகளும் பறிபோயின ஐம்பதிணாயிரம் தமிழர்கள் தங்களது இருப்பிடங்களிலிருந்து வெளியேறியுள்ளனர். இவர்களில் முப்பதிணாயிரம் பேருக்கு புனர்வாழ்வு அளிக்கப்படவேண்டியுள்ளது. அகதிகளாக வெளியேறியிருக்கும் இவர்கள், சிங்களக்கிராமங்களில்வாழ்ந்து வந்த தமிழ் பூர்வகுடி மக்கள்.

''இலங்கைத் தமிழ்மக்கள் மீதுவெளிநாடுகளில் வாழும் ஈழத்தமிழர் மிகுந்த பரிவுணர்வும், ஆதரவும்கொண்டுள்ளனர். அமெரிக்காவில் வாழும் இலங்கைத் தமிழர் 22,000 டாலர் நிதியுதவி அளித்துள்ளனர்''

''நீங்கள் இலங்கையின் எதிர்க்கட்சித்தலைவர் வெளிநாடுகளில் இலங்கை அரசுக்கு எதிராக மேற்கொள்ளும் பிரசார முயற்சிகள் பற்றி இலங்கை அரசாங்கம் ஆட்சேபிக்காதா? என்று ஒரு நிருபர் கேட்டார்.

இதற்கு திரு. அமிர்தலிங்கம் பதிலளிக்கையில், ''அரசின் பிரதிபலிப்பு பற்றி எங்களுக்கு அக்கறையில்லை. அவர்களின் தயவிலும் நான் இல்லை. நான் ஒரு எதிர்க்கட்சித் தலைவர்; தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் என்ற எனது சுய உரிமையின் மீதே இங்கு வந்துள்ளேன். இந்தவகையில் எனது இனத்தின் சார்பாகக் குரல் எழுப்புவது எனது தூயகடமை அல்லவா?'' என்று அந்த நிருபரைப் பார்த்து 'அமிர்' கேட்டார்.

''நான் அடுத்ததாகக் கனடா செல்கிறேன். அங்குள்ள தமிழர்களைச்சந்தித்த பின்னர் இந்தியா சென்று புதுடில்லியிலும், சென்னையிலும் தமிழ் மக்களைச் சந்தித்து விட்டுத் தாயகம் திரும்புவேன்'' என்று கூறி முடித்தார்.

திரு. அமிர்தலிங்கம் நவம்பர் முதலாம் திகதியளவில் இந்தியாவுக்கு வருகிறார்.

## மாவட்ட மந்தி...

—1ம் பக்கத் தொடர்

திரிகளாவர். முழு மந்திரிகளாக 28 பேரையும், முக்கால் மந்திரிகளாக 26 (22.4) பேரையும் அரை மந்திரிகளாக 28 பேரையும் அவரே நியமித்துளர். (அதிகாரங்களின் அடிப்படையில் இவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது.)

இந்த மாவட்ட அமைச்சர்களுக்குரிய விடயங்கள் பணிகள் முதலியவற்றையும் சனாதிபதியே முடிவு செய்வார். இந்த அமைச்சர்கள் சனாதிபதிக்கு மட்டுமன்றி அமைச்சர் அவைக்கும் கட்டுப்பட்டவர்கள் எனவும் அரசியல் அமைப்பு விதிக்கின்றது. சனாதிபதி நினைத்தால் கூடிய அதிகாரங்களை இவர்களுக்குக் கொடுக்கலாம்;, கொடுத்த அதிகாரங்களைப் பறிக்கலாம்; ஒரு கணப்பொழுதில் பதவியில் இருந்து இவர்களை நீக்கலாம். சுருங்கச் சொன்னால் இவர்கள் சனாதிபதியின் பிரதிநிதிகளாக அவருடைய எண்ணப்படி ஆட வேண்டியவர்களே! எனவே இந்த முக்கால் மந்திரி பதவியைப் பெற்றுப் பொம்மைக் கூத்து ஆடவிரும்பலாமா?

சிங்கள சர்வாதிகார ஏகாதிபத்தியத்தின் தலைவருடைய பிரதிநிதிகளை— அரசியல் வாதிகளை—தமிழ் மாவட்டங்களில் குட்டி அரசர்களாக — சர்வாதிகளாக ஆக்கித் தமிழ் இனத்தின் அடிமைத்தளையைத் தீவிரமாக இறுக்குகின்றது. இது சனாதிபதியின் அளப்பரிய அரசியல் சாணக்கியமாகும். இதனால் தமிழ் ஈழக் கோரிக்கையைப் புதைத்துவிடலாம் என அவர் மனப்பால் குடிக்கிறார். எனவே மாவட்ட மந்திரி நியமனத் திட்டத்தை எவ்வித மயக்கமும் தயக்கமுமின்றி தமிழர்கள் முழு மூச்சுடன் எதிர்க்க வேண்டிய சூழ்நிலைதான் உருவாகி விட்டது என்பதை எவரும் மறுக்கமுடியாது.

கிங்ஸ்லி
(கொழும்பு)
சிவாஜி கணேசன், கே. ஆர். விஜயா
டி. எஸ். பாலையா நடித்த-
நீதி
[புதிய பிரதி]

விஜயா (மட்டுநகர்)
கடைசி சில தினங்கள்
சிவாஜி நடித்த-—
உத்தமன்
— அலர் —

கெப்பிட்டல்
3-வது வாரம்
மரிக்கார் ராமதாஸ், ஹெலன் குமாரி,
சிவராம், ராஜகோபால் நடித்த-
ஏமாளிகள்

லிடோ (யாழ்நகர்)
மஞ்சள் குங்குமம்

செல்லமகால்
2-வது வாரம்
எஸ். எஸ். ஆர். — தேவிகா
நடித்த -
கல்யாணிக்கு
கல்யாணம்
(புத்தம் புதிய கொப்பி)

கெயிட்டி [கொட்டாஞ்சேனை]
4-வது வாரம்
எம். ஜி. ஆர். — மாதுருதேவி
அஞ்சலிதேவி, பண்டரிபாய், நம்பியார்
- நடித்த -
மர்மயோகி
(புதிய பிரதி)

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மா காந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1978 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org